بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 10

இதழ் 38

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ரபீயுல் அவ்வல் 25 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - தபூக் 18 ★ 18 செப்டம்பர் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا ادْخُلُوْا فِي السِّلْمِ كَآفَّةً ۠ وَلَا تَتَّبِعُوْا خُطُوٰتِ الشَّيْطٰنِ ؕ اِنَّهٗ لَكُمْ عَدُوٌّ مُّبِيْنٌ ۝

**பொருள்**

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான்.

(2:209)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## அதிகமாக இஸ்திஃக்ஃபார் செய்யுங்கள்
## இது மனிதன் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழிமுறையாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### ஆன்மிக முன்னேற்றத்திற்கான திறவுகோல் இஸ்திஃக்ஃபார் ஆகும்

ஒரு நபர் தனது கடன் தொடர்பாக துஆவிற்காக விண்ணப்பித்தார். கூறினார்கள்:

அதிகமாக இஸ்திஃக்ஃபார் செய்து வாருங்கள். இது மனிதன் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழிமுறையாகும்.

ஒரு நபரிடம் இஸ்திஃக்ஃபார் செய்யுமாறு வலியுறுத்தியவாறு கூறினார்கள்:

இஸ்திஃக்ஃபார் ஆன்மிக முன்னேற்றத்திற்கான திறவுகோல் ஆகும்.

### திருக்குர்ஆனில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் அவருடைய ஜமாஅத்தினைப் பற்றிய குறிப்பு

கூறினார்கள்: திருக்குர்ஆனில் ஓதப்படும் நான்கு சூராக்கள் இருக்கின்றன. அவற்றில் மஸீஹ் மவ்வூத் மற்றும் அவரது ஜமாஅத்தைப் பற்றிய குறிப்பு இருக்கின்றது. 1) ஒவ்வொரு ரக்அத்திலும் ஓதப்படுகின்ற சூரா ஃபாத்திஹா ஆகும். இதன் விளக்கவுரையில் நிரூபணம் செய்யப்பட்டிருப்பது போன்று இதில் எமது வாதத்திற்கான சான்று உள்ளது. 2) சூரா ஜுமுஆ. அதில்

اٰخَرِيْنَ مِنْهُمْ

என்பது மஸீஹே மவ்வூத்துடைய ஜமாஅத்தை குறித்து ஆகும். இது ஒவ்வொரு ஜுமுஆவிலும் ஓதப்படுகின்றது. 3) சூரா கஹஃப், இதனை ஓதுவதற்காக இறைத் தூதர் (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். இதன் முதல் மற்றும் கடைசி பத்து வசனங்களில் தஜ்ஜாலின் குறிப்பு உள்ளது. 4) திருக்குர்ஆனின் கடைசி சூரா அதில் தஜ்ஜாலுடைய பெயர் خَنَّاس என்று வைக்கப்பட்டுள்ளது.

இது இப்ரானீ தவ்ராத்தில் தஜ்ஜாலிற்காக வந்துள்ள அதே சொல்லாகும். அதாவது நஹாஷ். இதே போன்று திருக்குர்ஆனின் மற்ற இடங்களிலும் ஏராளமான குறிப்பு இருக்கின்றது.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 86, காதியான் பதிப்பு 2018ம் ஆண்டு)

* * * * * * * *

## மனிதன் இறை வணக்கத்தில் உறுதியாக நிலைபெற்று விட்டால் பின்னர் மற்ற நன்மைகள் தானாகவே அவனிடமிருந்து வெளிப்படத் துவங்கிவிடும்

ثُمَّ اَنْشَاْنٰهُ خَلْقًا اٰخَرَ (23:14)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மேற்குறிப்பிட்ட வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்: எனக்கு ஓர் இரவில் நாற்பதாயிரம் அரபி வேர்ச் சொற்கள் அல்லாஹ்வின் புறமிருந்து கற்றுக் கொடுக்கப்பட்டது. தற்போது இது அன்னாரிடம் உருவாகிய அந்த புரட்சியாக இருந்தது. ஆனால், இந்த புரட்சியைக் கண்டு விட்டு மாணவர்கள் பள்ளிக் கூடத்தில் படிப்பதை விட்டு விட்டால் மேலும் வானவர்கள் வருவார்கள் ; அறுபதாயிரம் அரபி வேர்ச் சொற்களை எங்களுக்கு கற்றுக் கொடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில் அமர்ந்து விட்டால் பின்னர் அவர்களை அறிவு படைத்தவர்கள் என்று எவர் கருதுவார்? புரட்சி என்பது உருவாக்கப்படுவதில்லை ; மாறாக, புரட்சி என்பது தானாகவே உருவாகின்றது. புரட்சி என்பது லட்சக் கணக்கான நாட்களில் ஏதாவது ஒரு நாளில் ஏற்படுகிறது. மற்ற அனைத்து நாள்களும் கடந்து சென்று விடுகின்றன. மேலும் மனிதன் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலையை படிப்படியான முயற்சி,உழைப்பு மற்றும் தியாகத்தால் அடைகின்றான். இந்த நோக்கத்திற்கு அடிப்படையில் இந்த விஷயத்திற்கான தேவை இருக்கின்றது. அதாவது, அல்லாஹ்வை களங்கமற்றத் தன்மையுடன் வணங்க வேண்டும். மேலும் அதில் உறுதியாக நிலை நிற்க வேண்டும். மனிதன் இறை வணக்கத்தில் நிலைபெற்று விட்டால் பின்னர் மற்ற நன்மைகள் தானாகவே அவனிடம் வெளிப்படத் துவங்கி விடும். ஆனால், இதன் பொருள் கடமையான தொழுகைகளை மட்டுமே தொழ வேண்டும் என்பதன்று. மாறாக, தஹஜ்ஜுத் மற்றும் நஃபில்கள் மீதும் அழுத்தம் கொடுக்க வேண்டும். இதே போன்று நேர்மை, அமானிதம், உடன்படிக்கையை பேணுதல், ஏழைகளை பராமரித்தல் மற்றும் தூய்மை போன்றவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த நன்மைகளில் பங்கு பெறும் போது மனிதன் எந்த அளவிற்கு முன்னேற்றம் அடைந்து விடுகின்றான் என்றால், இறுதியில்

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம் ......

## நபிமொழி

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ அவ்ஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு நபர் தனது அனைத்து பொருள்களையும் விற்பனைக்காக வைத்தார். மேலும், இந்த பொருளுக்காக இவ்வளவு விலை எனக்கு கொடுக்க நேரிட்டது என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தார்.

(ஆனால், உள்ளபடியே அவ்வளவு விலை அதற்கு கொடுக்கப்பட்டிருக்கவில்லை). அப்போது இந்த வசனம் இறங்கியது. எந்த மக்கள் அல்லாஹ்வின் உடன்படிக்கை மற்றும் தமது சத்தியங்களுக்கு பகரமாக அற்ப விலையை பெற்றுக் கொள்கின்றனரோ?

ஹஸ்ரத் அப்துல்லாஹ் (பின் மஸ்ஊத்) (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எவர் பொய்யராக இருந்து கொண்டு ஒரு நபருடைய அல்லது கூறினார்கள்: தனது சகோதரரின் செல்வத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சத்தியம் செய்வாரோ அவர் அல்லாஹ்வை எப்படிப்பட்ட நிலையில் சந்திப்பார் என்றால் அல்லாஹ் அவரிடம் கோபம் கொள்வான்.

மேலும் கண்ணியமிக்க அல்லாஹ் திருக்குர்ஆனில் இது தொடர்பாக இந்த வசனத்தை இறக்கியுள்ளான்:

எந்த மக்கள் அல்லாஹ்வின் உடன்படிக்கை மற்றும் தங்களது சத்தியத்திற்கு பகரமாக அற்ப விலையை பெறுகின்றார்களோ அவர்களுக்கு வேதனை மிக்க தண்டனை (நிர்ணயிக்கப்பட்டு) உள்ளது.

* * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றி மற்றும் வேறு சில போர்களின் ஒளியில்**
**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு படையை அனுப்பி வைக்கும்போது, போரில் அவசரப்படக் கூடாது; மெதுவாக மற்றும் மென்மையை மேற்கொள்ளவேண்டும்; மேலும் சண்டையிடுவதற்கு முன்னர் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுக்க வேண்டும்; அதன் கட்டளைகளை விளக்கிக் கொடுக்க வேண்டும்; அப்போது தான் சான்று முழுமை செய்யப்படும்; மேலும் எங்கிருந்து பாங்கு சப்தம் கேட்குமோ அங்கு தாக்குதல் தொடுக்கக் கூடாது போன்ற வழிகாட்டலையே அன்னார் (ஸல்) வழங்கி வந்தார்கள்
ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த முழு சம்பவத்தைப் பற்றி தெரிய வந்தபோது
அன்னாருக்கோ மிகவும் வேதனை ஏற்பட்டது. அன்னார் (ஸல்) கூறினார்கள்:
நானோ கொலை செய்யும்படி காலிதிற்கு கட்டளை வழங்கியிருக்கவில்லை; மேலும்,
அவர்களுக்கு இஸ்லாத்திற்கான அழைப்பை விடுக்கும்படி மட்டுமே கூறியிருந்தேன்.
மேலும் அன்னார் (ஸல்) தமது இரு கரங்களையும் உயர்த்தினார்கள். மேலும்,

اَللّٰهُمَّ اِنِّیْ اَبْرَأُ اِلَیْکَ مِمَّا صَنَعَ

என்று இரண்டு முறை இறைவனிடம் வேண்டினார்கள்.

பொருள்: இறைவா! காலித் செய்தவற்றிலிருந்து நான்
உன் சமூகத்தில் தொடர்பின்மையை வெளிப்படுத்துகின்றேன்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 15 ஆகஸ்ட் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுஹுர்** மாதம் **15 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْھَدُ اَنْ لَّا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَحْدَہٗ لَا شَرِیْکَ لَہٗ
وَاَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰہِ مِنَ الشَّیْطٰنِ الرَّجِیْمِ
بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ
اَلْحَمْدُ لِلّٰہِ رَبِّ الْعٰلَمِیْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ○
مٰلِکِ یَوْمِ الدِّیْنِ ○ اِیَّاکَ نَعْبُدُ وَاِیَّاکَ نَسْتَعِیْنُ ○
اِھْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِیْمَ ○
صِرَاطَ الَّذِیْنَ اَنْعَمْتَ عَلَیْھِمْ
غَیْرِ الْمَغْضُوْبِ عَلَیْھِمْ وَلَا الضَّآلِّیْنَ ○

கடந்த ஜுமுஆவில் மூன்று பெரும் சிலைகளை அழித்தது தொடர்பாக கூறப்பட்டிருந்தது. அதன் கூடுதல் விவரம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஸஅது பின் ஸைது அஷ்ஹலீ (ரலி) அவர்களுடைய ஒரு போர்ப் படை இருந்தது. அது ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ரமலான் மாதம் மனாத் என்ற இடத்தின் பக்கம் அனுப்பப்பட்டது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ரமலான் 24-ஆம் நாள் ஹஸ்ரத் ஸஅது பின் ஸைது (ரலி) அவர்களை மனாத் சிலையை அழிப்பதற்காக அனுப்பி இருந்தார்கள். அது செங்கடலின் கரையோரத்திற்கு அருகில் முஷல்லல் என்ற இடத்தில் நிறுவப்பட்டிருந்தது. இதன் காரணமாக இந்த போர்ப் படை முஷல்லல் என்றும் கூறப்படுகிறது.

(ஷரஹ் ஸர்கானீ,தொகுதி 3, பக்கம் 490-491,தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் ஸைது பின் ஸைது அஷ்ஹலீ (ரலி) அவர்கள் இருபது போர் வீரர்களுடன் புறப்பட்டார்கள். அன்னார் அங்கு சென்றடைந்தபோது, அங்கு ஒரு பூசாரியும் இருந்தார். நீங்கள் என்ன விரும்புகின்றீர்கள்? என்று ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்களிடம் பூசாரிக் கேட்டார். மனாத் சிலையை உடைக்க வேண்டும் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

நீங்கள் இந்த பணியை செய்வீர்களா? என்று அவன் கூறினான். அதாவது, இது உங்களால் செய்ய முடியும் என்பது சாத்தியமற்றதாகும். ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் சிலையை நோக்கி முன்னேறினார்கள்.

இது உண்மையா? என்பது தெரியவில்லை. சிலநேரம் விஷயத்தை அழகுபடுத்துவதற்காக இதுபோன்று எடுத்துரைத்து விடுகின்றனர். எவ்வாறிருப்பினும், அறிவிப்பாளர் கூறுகின்றார்:

அப்போது ஒரு நிர்வாணமான, கருமை நிறம் கொண்ட மற்றும் தலைமுடி சீர்குலைந்திருந்த பெண்மணி அறையிலிருந்து வெளியேறினாள். மேலும் தனது சிலையிடம், மனாத்தே! உனது சாபத்தை அனுப்புவாயாக என்று பூசாரி கூறினான்.

கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஸஅது பின் அஷ்ஹலீ (ரலி) அவர்கள் அவனை அதாவது பூசாரியை கொன்று விட்டார்கள். இந்தக் கொலையின் அறிவிப்பு சரியானது என்றால் பின்னர் அந்த பூசாரி எதிர்த்து போரிடுவதற்கு முயற்சி செய்திருப்பான். மேலும் சண்டையில் கொல்லப்பட்டிருப்பான். சாபமிடுவதால் மட்டும் கொலை செய்வது என்பது இஸ்லாத்தின் போதனையே கிடையாது; மேலும் அது சரியானதாகவும் தெரியவில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொதுவான வழிகாட்டல்களுக்கும் அது எதிரானதாகும்.

எவ்வாறிருப்பினும், அன்னாரும், அன்னாருடைய தோழர்களும் சிலையின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். மேலும், அதனை உடைத்து விட்டார்கள். பின்னர் தமது தோழர்களுடன் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். (அத்தப்காத்துல் குப்ரா, தொகுதி 2, பக்கம் 111 - 113, ஸரிய்யா ஸஅத் பின் ஸைதுல் அஷ்ஹலீ இலா மனாத், தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இப்னு ஹஷ்ஷாம் இவ்வாறு எழுதியுள்ளார்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மனாத்தை நோக்கி அபூஸுஃப்யான் பின் ஹர்பை அனுப்பி வைத்தார்கள். மேலும், இவ்வாறும் கூறப்படுகிறது. அதாவது இந்தப் பணியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் செய்தார்கள். ஆனால், வாக்தீ மற்றும் இப்னு ஸஅத் ஆகியோரின் கருத்தின்படி ஹஸ்ரத் ஸஅத் பின் ஸைது (ரலி) அவர்கள் தான் அதனை அழித்தார்கள்.

மற்ற அறிவிப்புகளும் வாக்தீ அவர்களுடையதாகும். அவர் சில விஷயங்களை மிகைப்படுத்தியுள்ளார் என்பதும் சாத்தியமானதாகும்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் போர்ப் படை
நஃக்லா என்ற இடத்தை நோக்கி

இது ரமலான் 25-ம் நாள், ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு கி.பி 620,ஜனவரி மாதம் நிகழ்ந்தது. ரமலான் முபாரக் 25-ம் நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முப்பது நபர்களை உள்ளடக்கிய ஒரு குறும் படை ஒன்றை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் தலைமையில் நஃக்லாவை நோக்கி அங்கிருந்த உஸ்ஸா என்ற பெயர் கொண்டிருந்த குறைஷியர்களின் பிரபலமான சிலையை உடைத்து விட வேண்டும் என்பதற்காக அனுப்பி வைத்தார்கள். நஃக்லா மக்கா பள்ளத்தாக்கிற்கு கிழக்குப் பக்கம் ஒரு பகல் பயணத் தொலைவில் மக்கா மற்றும் தாயிஃப் நகரத்திற்கு இடையில் அமைந்துள்ளது. இந்த நஃக்லா என்ற இடத்தில் ஒரு வீடிருந்தது. அதன் பொறுப்பாளராகவும், கண்காணிப்பாளராகவும் பனூ ஷைபான் இருந்தார்; இந்தக் கோத்திரம் பனூ ஹாஷிமின் பங்காளிகள் ஆவர். இங்கு உஸ்ஸா சிலை குறைஷியர்களின் மிகப் பெரிய சிலையாக இருந்தது. இமாம் பைஹஃக்கீ அவர்கள் அறிவித்துள்ளார்கள்:

அதன் வீடு மூன்று கருவேலம் மரத்தினை உள்ளடக்கியிருந்தது. அதாவது, அதனைச் சுற்றிலும் கருவேலம் மரங்கள் இருந்தன. நடுவில் வீடு இருந்தது.

இப்னு இஸ்ஹாக் கூறுகின்றார்கள்: உஸ்ஸாவின் பூசாரிக்கு ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் வருகை தொடர்பாக தெரியவந்தபோது, அவன் சிலையின் மீது வாளை தொங்கவிட்டு விட்டு சுயம் மலையின்

மீது ஏறி விட்டான். மேலும், இந்தக் கவிதையை படிக்கத் துவங்கினான். அதன் பொருள் இவ்வாறாகும்:

உஸ்ஸாவே! காலிதின் மீது எப்படிப்பட்ட கடும் தாக்குதலை தொடுக்க வேண்டும் என்றால் எதுவுமே எஞ்சியிருக்கக் கூடாது. போர்க் கவசங்களை அணிந்து கொண்டு நீ தாக்குதலை தொடங்கு! உஸ்ஸாவே! நீ காலித் என்ற இந்த நபரை கொலை செய்யாவிட்டாலும் விரைவில் நிகழும் ஒரு பாவத்தை செய்தவராக அவரை ஆக்கிவிடு! அல்லது அவரை இதற்காகப் பழிவாங்கிவிடு!

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் நஃக்லா என்ற இடத்தை அடைந்த உடனேயே கருவேல மரங்களை வெட்டி விட்டார்கள். மேலும் உஸ்ஸா என்ற அந்த சிலை இருந்த வீட்டையே அழித்து விட்டார்கள். பின்னர் மக்காவிற்கு திரும்பி வந்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

நீங்கள் அங்கு ஏதாவது குறிப்பான விஷயத்தை பார்த்தீர்களா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் எதிர்மறையில் பதிலளித்தார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

பின்னர் நீங்கள் உஸ்ஸாவிற்கு முடிவு கட்டவில்லையா? நீர் திரும்பி செல்லும்; சென்று, அதனை வேரோடு அழித்துவிட்டு வாரும்!

இந்தக் கட்டளையைக் கேட்டதுமே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கட்டளையை செயல்படுத்துவதற்காக உடனடியாக புறப்பட்டுவிட்டார்கள்.

நிர்வாகிகள் மீண்டும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களைக் கண்டபோது, அவர்கள் மலையின் மீது ஏறிவிட்டனர். மேலும், உஸ்ஸாவே! இவர்களை அழித்து விடுவாயாக என்று கூறினர். இந்த சிலை வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து கருமை நிறம் கொண்ட தலைமுடி சீர்குலைந்த ஒரு பெண் வெளியேறினாள். (இங்கும் அவர்கள் பெண்களை வைத்திருக்கக் கூடும்)

ஹஸ்ரத் காலித் (ரலி) அந்த நேரத்தில் படித்த கவிதைகள் இதுவே ஆகும்.அந்த அரபிக் கவிதைகள் இவையாக இருந்தன.

يَاعُزَّ كُفْرَانَكَ لَا سُبْحَانَكَ إِنِّي رَأَيْتُ اللهَ قَدْ أَهَانَكَ

பொருள்: உஸ்ஸாவே! நான் உன்னை நிராகரிக்கின்றேன்; உனது தூய்மையை எடுத்துரைப்பதில்லை; அல்லாஹ் உன்னை இழிவுபடுத்திவிட்டான் என்பதை நான் கண்டுள்ளேன்.

இதன் பிறகு அன்னார் திரும்பி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தை வந்தடைந்து இந்தக் கருத்தை எடுத்துரைத்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

نَعَمْ، تِلْكَ الْعُزّٰى، وَقَدْ يَئِسَتْ
أَنْ تُعْبَدَ بِبِلَادِكُمْ أَبَدًا

பொருள்: ஆம்! இது எந்த உஸ்ஸா என்றால், உங்களது நகரத்தில் இனி அதனை வணங்குபவர் எவரும் இருக்க மாட்டார் என்று அது நிராசையடைந்து விட்டது.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா லி இப்னி ஹஷ்ஷாம், பக்கம் 760 -761. தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

அடுத்து, ஸுவாஃ பக்கம் அனுப்பப்பட்ட ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் போர்ப் படையைப் பற்றிய குறிப்பு உள்ளது. இதுவும் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு, ரமலான் மாதம் நிகழ்ந்தது. உஸ்ஸா சிலையை அழிப்பதற்கான படையுடன் சேர்த்தே இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களை ஸுவாஃ சிலையை அழிப்பதற்காக அனுப்பினார்கள். அன்னாருடன் சில தோழர்கள் இருந்தனர். ஆனால், அவர்களின் எண்ணிக்கைப் பற்றி குறிப்பிடப்படவில்லை. (அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅத்,ஸரிய்யா அம்ர் பின் அல்ஆஸ் இலா ஸுவாஃ, தொகுதி 2, பக்கம் 111, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஸுவாஃ என்பது மதீனாவிலிருந்து மேற்குப் பக்கம் கடற்கரையோரத்தில் ருஹாத்தில் பனீ ஹுஸைலுடைய சிலையாக இருந்தது. மேலும், இந்த இடம் மக்காவிலிருந்து மூன்று மைல் தொலைவில் இருந்தது. இந்த சிலையின் உருவம் ஒரு பெண்ணுடையதாக இருந்தது. மேலும், மக்கள் அதற்கு மரியாதை செலுத்தி வந்ததுடன் அதனை சுற்றி வலமும் வந்தனர். அதன் பூசாரி பனூ ஹுஸைல் கோத்திரத்தின்ஒரு கிளையாகிய பனூ லஹ்யான் கோத்திரத்தினராக இருந்தனர். (ஃபிரன்ங் ஸீரத், பக்கம் 136, ஸவார் அகாடமி, கராச்சி)

திருக்குர்ஆனில் சில சிலைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அதில் இந்த சிலையைப் பற்றியும் குறிப்பு உள்ளது. சூரா நூஹூல் இவ்வாறு வருகின்றது:

وَقَالُوْا لَا تَذَرُنَّ اٰلِهَتَكُمْ
وَلَا تَذَرُنَّ وَدًّا وَّلَا سُوَاعًا ۙ
وَّلَا يَغُوْثَ وَيَعُوْقَ وَنَسْرًا

(நூஹ்: 24)

பொருள்: ஒருபோதும் உங்களது தெய்வங்களை கைவிட்டு விடாதீர்கள்; வத்தையும் விட்டு விடாதீர்கள்; ஸுவாஹையும் விட்டுவிடாதீர்கள். யாஹூஸையும், யாகூக்கையும் விட்டு விடாதீர்கள் என்று அவர்கள் கூறினர்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நூஹ் சமுதாயத்தில் இருந்த அந்த சிலைகளானது பிற்காலத்தில் அரேபியர்களிடமும் வந்துவிட்டன. வத் என்ற சிலையானது கல்ப் கோத்திரத்துடையதாக இருந்தது. தூமத்துல் ஜுந்தல் பகுதியில் வசித்து வந்தனர். ஸுவாஃ என்பது ஹுஸைல் கோத்திரத்தாருடையதாக இருந்தது.யாகூஸ் முராத் கோத்திரத்தாருடையதாக இருந்தது. பின்னர் அது ஸபா நகரத்திற்கு அருகில் ஜுருஃப் என்ற இடத்தில் வசித்து வந்த பனூ ஃகுதைஃபுடையதாக ஆகிவிட்டது. மேலும், யாகூக் என்பது ஹம்தன் கோத்திரத்தாருடையதாக இருந்தது. மேலும் நஸர் என்பது ஸில் கலாஃவின் சந்ததிகளாகிய ஹிம்யருடையதாக இருந்தது.

உண்மையில் இவை அனைத்தும் ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களின் சமுதாயத்தைச் சார்ந்த அந்த சில நல்ல மனிதர்களின் பெயர்களாகும். அவர்கள் மரணித்த உடன், அவர்கள் எங்கெங்கெல்லாம் அமர்ந்து வந்தார்களோ அங்கு சிலையை எழுப்பி விடுங்கள்; மேலும் அவர்களின் பெயர்களை அவற்றுக்கு சூட்டுங்கள் என்ற எண்ணத்தை ஷைத்தான் அவர்களின் சமுதாயத்தின் உள்ளத்தில் ஏற்படுத்தினான்.

ஆக, அவர்கள் அவ்வாறே செய்தனர். அந்த நபர்களை வணங்கி வரவில்லை. ஆயினும், அவர்கள் மாண்டு விட்டபோதும், அசல் விவரங்கள் இல்லாமல் ஆனபோதும் அந்த சிலைகளை அவர்கள் வணங்கத் துவங்கி விட்டனர். அவர்களின் முன்மாதிரி வடிவங்களை உருவாக்கியும், அவர்களின் பெயர்களை சூட்டியும் வணங்கத் தொடங்கி விட்டனர். (ஸஹீஹ் புஹாரீ, கிதாபுத் தஃப்ஸீர், ஹதீஸ் எண்: 4920)

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ருஹாத் என்ற இடத்தில் ஸுவாஃ என்ற சிலையை அடைந்தபோது, அங்கு அவற்றின் பூசாரியை சந்தித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையின் பெயரில் தாம் இந்த சிலையை உடைப்பதற்காக வந்துள்ளதாக அன்னார் (ரலி) அவனிடம் கூறினார்கள். அதற்கு, நீர் இந்த சிலையை உடைப்பதற்கு ஒருபோதும் வலிமை பெற்றிருக்கவில்லை என்று அவன் பதிலளித்தான்.

அன்னார்(ரலி) அவனிடம் காரணத்தைக் கேட்டபோது, நீர் எந்நிலையிலும் தடுக்கப்பட்டு விடுவீர்! என்று அவன் பதிலளித்தான். உம் மீது பரிதாபமே! இதனால் கேட்க முடியுமா? மேலும் பார்க்க முடியுமா? என்று அன்னார் (ரலி) கூறினார்கள். பின்னர் முன்னேறிச் சென்று, அதனை உடைத்து விட்டார்கள். மேலும், அத்துடன் கட்டப்பட்டிருந்த அந்த வீட்டையும் இடித்து விடும்படி அன்னார் தம் தோழர்களிடம் கூறினார்கள். அவர்கள் அதனையும் இடித்து விட்டார்கள்.

பின்னர் அன்னார் (ரலி) அந்த பூசாரியிடம், தற்போது கூறும்! என்று கேட்டார்கள். அவர் தனது தெய்வங்களை இந்த நிலையைக் கண்டபோது, நான் அல்லாஹ்விற்கு கட்டுப்படுகின்றேன்; மேலும் இஸ்லாத்தை ஒப்புக் கொள்கிறேன் என்று உடனடியாக கூறினார்.

(அத்தப்காத்துல் குப்ரா, பாகம் 2, பக்கம் 111)

முன்னர் ஒரு பூசாரியை அல்லது ஒருவரை கொலை செய்ததாக கதை எடுத்துரைக்கப்பட்டது. அது சாத்தியமற்றதாகும் என்பது இந்த அடிப்படையிலும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

பனூ ஜஸீமியாவை நோக்கி அனுப்பப்பட்ட ஸரிய்யா ஹஸ்ரத் காலித் பின் வலீதும் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு, ஷவ்வால் மாதம் நிகழ்ந்ததாகும். மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் உஸ்ஸா சிலையை வீழ்த்தி விட்டு திரும்பி வந்தபோது, அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஜஸீமியாவை நோக்கி அனுப்பினார்கள். இந்தக் கோத்திரம் பனூ கினானாவின் கிளைக் கோத்திரமாக இருந்தது. இது மக்காவிற்கு அருகில் யலம்லம் பக்கம் வசித்து வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம், இந்த கோத்திரத்திற்கு இஸ்லாத்திற்கான அழைப்பை கொடுங்கள் என்று கூறினார்கள். மேலும், அவர்களுடன் போர் புரிய வேண்டாம் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களின் அடிப்படையான வழிகாட்டலாக எப்போதும் இருந்து வந்தது. அதாவது போர் செய்யக் கூடாது என்று எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் கூட்டத்தினர் மற்றும் பனூ ஸுலைமுடைய முந்நூற்றி ஐம்பது நபர்களுடன் புறப்பட்டார்கள். (அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅது,தொகுதி 2, பக்கம் 112, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அங்கு சென்றடைந்தபோது, தாக்குதல் தொடுப்பவர்கள் ஆயுதங்கள் ஏந்தியிருப்பதைப் போன்று அங்கு மக்கள் ஆயுதங்கள் ஏந்தியிருந்ததைக் கண்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஆயுதங்களை கீழே போட்டு விடுங்கள் என்று அந்த மக்களிடம் கூறினார்கள். மக்களோ இஸ்லாத்தை தழுவி விட்டனர். காலித் அவர்களின் இந்தக் கூற்றை செவிமடுத்து விட்டு,அவர்களில் ஜஹ்தம் என்ற பெயருடைய ஒரு நபர் எழுந்து நின்றார். மேலும், தமது சமுதாயத்தை நோக்கி உரையாடியவாறு இவ்வாறு கூறினார்:

பனூ ஜஸீமாவே! ஆயுதங்களை போட்டு விடாதீர்கள்; இவர் காலித் ஆவார். ஆயுதங்களை கீழே போட்டு விட்ட பிறகு, நீங்கள் கைது செய்யப்படுவதையும், மரணத்தையும் எதிர் கொள்ள நேரிடும்; எனவே நானோ ஆயுதங்களை கீழே வைக்க மாட்டேன்.

அப்போது, நாங்கள் கொலை செய்யப்படுவதற்கு நீர் ஏன் முயல்கின்றீர்?; ஆயுதங்களை கீழே வைத்து விடும் என்று ஜஹ்தம் என்ற அந்த நபரிடம் மற்ற அந்த மக்கள் கூறினர். மக்கள் அவருக்கு புரிய வைத்து வந்தனர். எதுவரை என்றால், அவரிடமிருந்து ஆயுதங்களை வாங்கி விட்டனர். ஆயுதங்களை வீசிவிட்ட பிறகு அந்த மக்கள் கைது செய்யப்பட்டு விட்டனர்.

இதுவும் அறிவிப்பில் உள்ளது. மேலும், ஒவ்வொரு முஸ்லிமிற்கும் ஒன்று, இரண்டு கைதிகள் கொடுக்கப்பட்டனர். மேலும், இரவு முழுவதும் சிறைவாசத்தில் இருந்தனர்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹஷ்ஷாம், பக்கம் 755, தாருல் குதுபில் இல்மியா. பெய்ரூத்)

அவர்கள் ஆயுதங்கள் ஏந்தியிருந்தனர் ; மேலும் அவர்களின் எண்ணங்கள் என்னவாக இருந்தது என்பது தெரியாமல் இருந்ததனால் அவர்கள் அநேகமாக கைது செய்யப்பட்டிருந்தனர்.

எவ்வாறிருப்பினும், ஓர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அங்கு சென்றடைந்து அவர்களுக்கு இஸ்லாத்திற்கு அழைப்பு விடுத்தபோது மக்கள் أَسْلَمْنَا என்று கூறுவதற்கு பகரமாக

صَبَأْنَا صَبَأْنَا

என்று கூறத் தொடங்கி விட்டனர். நாங்கள் மார்க்கத்தை விட்டு விலகி விட்டோம் என்று கூறினர். நாங்கள் எங்களது மார்க்கத்தை விட்டு விட்டோம்.

அப்போது ஹஸ்ரத் காலித் அவர்களுக்கு, இவர்கள் முஸ்லிம்கள் இல்லை என்ற தவறான புரிதல் ஏற்பட்டது. ஆக, அன்னார் (ரலி) அவர்களை கொலை செய்வதற்கு கட்டளையிட்டார்கள்.

(ஸஹீஹ் புகாரீ, கிதாபுல் மகாஸீ, அறிவிப்பு எண்: 4339) இந்த விளக்கம் முன்வைக்கப்படுகிறது.

இப்னு ஸஅது அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். காலித் அங்கு சென்றடைந்தபோது, நீங்கள் எந்த மார்க்கத்தில் நிலைபெற்றுள்ளீர்கள்? என்று அன்னார் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம், தொழுகின்றோம் போன்ற விஷயங்களை அவர்கள் பதிலாக அளித்தனர். அப்படியென்றால் நீங்கள் ஏன் ஆயுதம் ஏந்தினீர்கள்? என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அவர்களிடம் கேட்டார்கள். எங்களுக்கும், அரேபியாவின் ஒரு கோத்திரத்தாருக்குமிடையில் பகைமை இருந்து வருகின்றது; இது அதே எதிரி சமுதாயம் ஆகும் என்ற சந்தேகம் எழுந்தது. எனவே ஆயுதம் ஏந்தி விட்டோம் என்று அவர்கள் கூறினர்.

(அத்தபகாத்துல் குப்ரா லி இப்னி ஸஅது, பாகம் 2, பக்கம் 112, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இதற்கு விளக்கங்கள் அளிப்பதாக இருந்தாலும் கூட, அதன் தன்மையிலிருந்தே தெரிய வருகின்றது. அதாவது, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் எச்சரிக்கையடைந்திருந்தார்கள். மேலும் அவர்களின் உள்ளத்தில் அந்த மக்களைக் குறித்து சில சந்தேகங்களும், ஐயங்களும் உருவாகியிருந்தன.

எவ்வாறிருப்பினும் அறிவிப்பிலிருந்து தெரிய வருகின்றது: அதாவது, இந்த கைதிகள் தொழுது கொண்டும் இருந்தனர். முஸ்லிம்களாகவும் தென்பட்டிருந்தனர். எனினும், அந்த கைதிகளில் சில கைதிகள் எப்படிப்பட்டவர்களாக இருந்திருக்க முற்றிலும் வாய்ப்பு இருந்தது என்றால், ஜஹ்தம் மற்றும் அவனுடைய கூற்றை ஆமோதிக்கக கூடிய கிளர்ச்சியை வெளிப்படுத்தக் கூடியவர்களும் இருந்தனர். மேலும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அந்த மக்களின் மீது அதிருப்தி கொண்டிருந்தார்கள். மேலும், சிலரின் صَبَأْنَا என்ற கூற்றும் ஹஸ்ரத் காலித் அவர்களை உஷார்படுத்தி விட்டது. எனவே அன்னார் ஓர் இரவின் இறுதிப் பகுதியில் இந்தக் கைதிகளை கொலை செய்வதே உகந்ததாக தெரிகிறது என்ற ஃபத்வாவை வழங்கினார்கள்.

அதனால் சில முஸ்லிம்கள் தமது சில கைதிகளை கொலை செய்து விட்டார்கள். ஆனால்,பழைய முஸ்லிம்களாக இருந்த முஹாஜிர்களும், அன்ஸார் கூட்டத்தினரும் காலித் அவர்களின் கருத்தில் உடன்படவில்லை. மேலும் தமது கைதிகளை கொலை செய்யவில்லை. அன்ஸார் கூட்டத்தின் தலைவரான அபூ உஸைது ஸாஇதீ ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். மேலும், இவர்கள் முஸ்லிம்கள் ஆவர் ; இவர்களை கொலை செய்வது சரியானது கிடையாது என்று அன்னாரிடம் கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி), ஹஸ்ரத் ஸாலிம் மவ்லா அபூ ஹுஸைஃபா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் கருத்துடன் உடன்படவில்லை. மேலும், தமது மற்ற தோழர்களை தத்தமது கைதிகளை கொலை செய்வதிலிருந்து தடுத்து விட்டார்கள். இந்த விடுதலை பெற்ற கைதிகளில் ஒரு கைதி மதீனா சென்றடைந்து இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் நிலைமையை எடுத்துரைத்தார்கள். அப்போது , அன்னார் (ஸல்) கேட்டார்கள்: யாரெல்லாம் காலிதுடைய கூற்றிலிருந்து கருத்து வேறுபாடு கொண்டிருக்கவில்லை அல்லது தடுக்க வில்லை? அவர் கூறினார்: ஒரு வெள்ளை நிற மற்றும் நடுத்தர உயரம் கொண்ட நபர் இருந்தார். மேலும் உயரமான நபரும் இருந்தார். மேலும், இவர்கள் இருவரும் காலிதுடன் பேசினர். மேலும், ஒருவர் சற்று உரத்த தொனியில் பேசினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த நேரம் அந்த சபையில் இருந்தார்கள்.

ஹுஸூர்! ஒருவரோ எனது மகன் அப்துல்லாஹ் ஆவார்; அதாவது உயரமான நபரான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களும், மற்றொருவர் ஸாலிம் மவ்லா அபூ ஹுஸைஃபா ஆவர் என்று அன்னார் (ரலி) இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் கூறினார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹஷ்ஷாம், பக்கம் 756. தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த முழு சம்பவத்தைப் பற்றி தெரிய வந்தபோது அன்னாருக்கோ மிகவும் வேதனை ஏற்பட்டது. அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நானோ கொலை செய்யும்படி காலிதிற்கு கட்டளை வழங்கியிருக்கவில்லை. அவர்களுக்கு இஸ்லாத்திற்கான அழைப்பை விடுக்கும்படி மட்டுமே கூறியிருந்தேன். மேலும், அன்னார் (ஸல்) தமது இரு கரங்களையும் உயர்த்தினார்கள். மேலும்,

اَللّٰهُمَّ اِنِّیْ اَبْرَأُ اِلَیْكَ مِمَّا صَنَعَ

என்று இரண்டு முறை இறைவனிடம் வேண்டினார்கள்.

பொருள்: இறைவா! காலித் செய்தவற்றிலிருந்து நான் உன் சமூகத்தில் தொடர்பின்மையை வெளிப்படுத்துகின்றேன்.

இதே போன்று அன்னார் (ஸல்) காலித் பின் வலீத் அவர்களிடத்தில் கோபத்தை வெளிப்படுத்தினார்கள். அதாவது, ஏன் இவ்வளவு அவசரமாக செயல்பட்டீர்? நீர் நன்றாக ஆய்வு செய்திருக்க வேண்டும் என்று அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். (ஸஹீஹுல் புஹாரீ, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4339)

அடுத்து அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை பனூ ஜஸீமாவை நோக்கி அவர்களின் கொலையுண்டவர்களுக்கான இழப்பீட்டை வழங்குவதற்காகவும், முழு விவகாரத்தை ஆய்வு செய்வதற்காகவும் அனுப்பினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அங்கு சென்று கொலையுண்ட நபர்களின் வாரிசுகள் அனைவருக்கும் இரத்த இழப்பீட்டுத் தொகையை செலுத்தினார்கள். மேலும் அவர்களிடமிருந்து முஸ்லிம்கள் பெற்ற செல்வங்கள் அனைத்தையும் அவர்களுக்கு திருப்பிக் கொடுத்து விட்டார்கள். எந்த அளவிற்கு என்றால், நாய் எந்த பாத்திரத்தில் தண்ணீர் அருந்தி வந்ததோ அந்தப் பாத்திரத்தைக் கூட திருப்பிக் கொடுத்து விட்டார்கள். அனைவருக்கும் இழப்பீட்டுத் தொகை போன்றவற்றை வழங்கிய பிறகு, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் சிறிது செல்வம் எஞ்சியிருந்தது. அப்போது அன்னார் (ரலி) பனூ ஜஸீமாவின் மக்களிடம், ஒருவருடைய ஏதாவது பாதிப்புக்கு இழப்பீடு கிடைக்காத நபர் யாராவது இருக்கின்றாரா? என்று கேட்டார்கள். அதற்கு, இல்லை! என்று அனைவரும் பதிலளித்தனர்.

பின்னர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எஞ்சியிருந்த செல்வத்தையும் அவர்களிடமே கொடுத்து விட்டார்கள். மேலும், இதனை நான் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் சார்பாக முன்னெச்சரிக்கையாக கொடுக்கின்றேன். அல்லாஹ்வின் தூதரும், நீங்களும் அறியாத எவரும் அறிந்திராத, அந்த சாத்தியமான பாதிப்புக்கு பரிகாரம் கிடைத்து விட வேண்டும் என்பதற்காக நான் இதனை வழங்குகிறேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் முழு அறிக்கையை சமர்ப்பித்தார்கள். மேலும், அவர்களின் சிறு, சிறு பொருட்களும் கூட அவர்களுக்கு திருப்பி ஒப்படைக்கப்பட்டு விட்டது;மேலும், எஞ்சிய செல்வமும் கூட

அவர்களுக்கு கொடுக்கப்பட்டு விட்டது என்றும் கூறினார்கள். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும்,

أَصَبْتَ وَأَحْسَنْتَ

என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள். பொருள்: நீங்கள் மிகவும் நல்லது செய்துள்ளீர்கள்; மிகவும் சிறப்பாக செய்துள்ளீர்கள்.

இந்த சம்பவத்திற்கு முன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கனவு ஒன்றையும் கண்டிருந்தார்கள். அதனை ஸீரத் இப்னு ஹஷ்ஷாமில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் கனவு ஒன்றைக் கண்டேன். அதாவது நான் பாலாடைக்கட்டி மற்றும் நெய்யும் கலந்த ஹேஸ் எனும் ஒரு வகை உணவை உண்டேன். அதன் ஒரு கவளத்தை உண்டபோது, எனக்கு அதன் சுவை மிகவும் இன்பமாக இருந்தது. ஆனால், நான் அதனை விழுங்கியபோது அதன் சில பகுதி எனது தொண்டையில் சிக்கிக் கொண்டது. பின்னர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கையை விட்டு அதனை வெளியில் எடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் அதற்கு விளக்கமளித்தவாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது தங்களால் அனுப்பப்பட்ட போர்ப் படைகளில் ஒரு போர்ப் படை ஆகும். இதனை நீங்கள் அனுப்பி வைப்பீர்கள். அதன் சில விஷயங்களை தாங்கள் விரும்புவீர்கள்; மேலும் சில விஷயங்கள் ஆட்சேபனைக்குரியதாக இருக்கும். பின்னர் தாங்கள் (ஸல்) ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அனுப்பி வைப்பீர்கள். மேலும், அன்னார் அதனை எளிதாக்கிவிடுவார்கள். அதாவது, விவகாரத்தை சரி செய்து விடுவார்கள்.

(அஸ்ஸீரத் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 756, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஆக, இந்த போர்ப் படையின் சம்பவத்தின் மூலம் இந்தக் கனவு முழுமையடைந்து விட்டது. புஹாரீயின் விரிவுரையாளரும் ஜமாஅத்தின் பிரபலமான சான்றோருமாகிய ஹஸ்ரத் ஸய்யது ஸைனுலாபுதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் புஹாரியின் விளக்கவுரை எழுதியுள்ளார்கள். இந்த அனைத்து சம்பவங்கள் மற்றும் அறிவிப்புகளை ஆய்வு செய்தவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள்:

தப்காத் இப்னு ஸஅது மற்றும் ஸீரத் இப்னு ஹஷ்ஷாம் இரண்டு நூல்களிலும் இந்த திட்டத்தைப் பற்றிய குறிப்பு உள்ளது. மக்கா வெற்றிக்குப் பிறகு பல்வேறு திசைகளில் பல்வேறு கோத்திரங்களின் பக்கம் அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் இருக்கும் ஆர்வத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு சிறிது படைகளை அனுப்பினார்கள். பலவந்தமாக முஸ்லிம்களாக ஆக்குவதற்கு அனுப்பவில்லை.

ஆக, ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களை பனூ ஜஸீமாவை நோக்கி அன்னார் (ஸல்) அனுப்பி வைத்ததும் இதே நோக்கத்திற்காகவே இருந்தது.

தப்காத் இப்னு ஸஅதில் இந்த விவகாரம் இந்த சொற்களில் வெளிப்படுகின்றது:

அதாவது,

بَعَثَهُ إِلَىٰ بَنِي جَذِيمَةَ دَاعِيًا إِلَى الْإِسْلَامِ
وَلَمْ يَبْعَثْهُ مُقَاتِلًا

பொருள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூந்நூற்றி ஐம்பது முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் கூட்டத்தினருடன் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை ஷவ்வால் மாதம், ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு பனூ கினானா கோத்திரமான பனூ ஜஸீமாவிடம் அனுப்பி வைத்தார்கள். அது மக்காவிற்கு அருகில் யலம்லம் பக்கத்தில் வசித்து வந்தது. அவர்களை அங்கு போரிடுவதற்காக அல்ல மாறாக இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் நோக்கத்துடன் அனுப்பியிருந்தார்கள். இந்தக் கோத்திரம் இஸ்லாத்தின் பக்கம் ஆர்வம் கொண்டிருந்தது. இந்தத் திட்டத்தின் பெயர் . يوم الغُمَيْصَاء என்பதாகும்.

غُمَيصَاء

என்பதன் பொருள் நீரூற்றிலிருந்து வெளிவரக் கூடிய தண்ணீர் என்பதாகும். புனித மக்காவிற்கு அருகில் பாதியாவில் இந்த ஓர் இடம் இருந்தது. அங்கு பனூ ஜஸீமஃ வசித்து வந்தனர். இந்த அறிவிப்பின் அறிவிப்பாளராகிய ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் இந்த திட்டத்தில் இடம் பெற்றிருந்தார்கள். அவர்களின் கூற்று சுருக்கமானதாக இருக்கின்றது.

இப்னு இஸ்ஹாக் இந்த சம்பவத்தின் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், பனூ ஜஸீமாவின் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு மறுத்து விட்டனர். மேலும் பெரும்பான்மையினர் முஸ்லிம்களாக ஆகிவிட்டிருந்தனர். இஸ்லாத்தை நிராகரித்தவர்கள் ஆயுதம் ஏந்தி போரிடத் துவங்கினார்கள். அதன் காரணமாக ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அந்த மக்களுடன் சண்டையிட்டார்கள். மேலும் தோல்வியடைந்ததால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் சிலர் தங்களை தாங்களே சண்டையில் இருப்பதைக் கண்டு .

صَبَأْنَا صَبَأْنَا

என்ற சொற்களில் இஸ்லாத்தை வெளிப்படுத்த துவங்கினர்.

صَبَأْنَا

என்பதன் பொருள் நாங்கள் ஸாபி ஆவோம் என்பதாகும். அதாவது எங்களின் மார்க்கத்தை நாங்கள் மாற்றிக் கொண்டோம்.ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புனித மக்காவில் மக்கத்து காஃபிர்களால் ஸாபி என்ற சொல்லால் வஞ்சகமாக அழைக்கப்பட்டார்கள். மேலும், மக்களுக்கு இந்த சொல்லின் மூலம் வெறுப்பு ஏற்படுத்தப்பட்டு வந்தது. அதாவது அவர்கள் தங்களது மார்க்கத்தை மாற்றிக் கொண்டு விட்டனர். எவ்வாறிருப்பினும், சண்டையிடக் கூடியவர்கள் தெள்ளத் தெளிவாகவும் திறந்த மனதுடனும் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதை வெளிப்படுத்தியிருக்கவில்லை. மாறாக, அவர்கள் .

صَبَأْنَا

என்ற சொல்லை பயன்படுத்தத் தொடங்கினர். இந்த கூற்றின் மூலமாக அவர்கள் சண்டையில் தங்களை கொலை செய்யப்படுவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் தூதுச் செய்தியின் படி எனது கைதிகளை கொலை செய்யவில்லை. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இந்த சம்பவத்தை குறிப்பிட்டேன். அப்போது அன்னார் (ஸல்) கரங்களை உயர்த்தினார்கள்; மேலும், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடமிருந்து தொடர்பின்மையையும், கோபத்தையும் வெளிப்படுத்தினார்கள். இப்னு இஸ்ஹாக் மற்றும் இப்னு ஸஅது அறிவிக்கின்றார்கள்:

முஹாஜிர்களில் பனூ ஸுலைம் மற்றும் முத்லஜ் கோத்திரங்களின் போர் வீரர்களும் பங்கு பெற்றிருந்தனர். அவர்கள் பனூ ஜஸீமஃவைப் போன்று பனூ கினானஃவின் ஒரு கிளைக் கோத்திரமாக இருந்தனர். மேலும் ஜஸீமா கோத்திரத்தாருக்கு இதற்கு முன்னர் ஒரு போரில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தனர். பனூ ஜஸீமா பனூ ஸுலைம் மற்றும் முத்லஜ் கோத்திரத்தை இஸ்லாமிய முஜாஹித்களின் படைகளுடன் கண்டபோது அவர்களுடன் சண்டையிடுவதற்கு அவர்கள் ஆயுதம் ஏந்தி விட்டனர். அப்போது ஏற்கனவே கூறப்பட்டது போன்று, மக்கள் முஸ்லிம்களாகிவிட்டனர்; எனவே இந்த போர் எதற்காக? ஆயுதங்களை கீழே போடுங்கள் என்று ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்கள், அந்த மக்களிடம் கூறினார்கள்.

ஆயுதங்களை கீழே போடாதீர்கள்; அவ்வாறு செய்தால் நீங்கள் கொலையும், கைதும் செய்யப்படுவீர்கள் என்று ஜஹ்தம் என்ற பெயர் கொண்ட தலைவன் அந்த மக்களுக்கு ஆலோசனை வழங்கினான். சமுதாயத்தின் சில நபர்கள் அவனைத் தடுத்தனர். மேலும், நீர் ஏன் போர் புரிய தூண்டுகின்றீர்? மக்களோ முஸ்லிம்களாகிவிட்டனர் என்று கூறினர். இப்னு ஹஷ்ஷாம் அவர்களுடைய அறிவிப்பில் இவ்வாறு காணப்படுகின்றது: அதாவது இந்த பனீ கனானஃ கோத்திரங்களுக்கிடையில் சில போர்களுக்கான பழிவாங்குதலுக்கான கேள்வியும் இருந்தது. அதன் காரணமாக சிலர் சண்டையிட்டனர்; மேலும் கொலை செய்யவும், கைது செய்யவும் பட்டனர்.

பனூ ஸுலைமுடைய போர் வீரர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுடைய ஃபத்வாவின்படி தங்களின் சில கைதிகளை ஏதோ ஒரு தனிப்பட்ட பழிவாங்குதலில் கொலை செய்து விட்டனர். மேலும், அதன் வெளிப்பாடானது இஸ்லாத்தில் நயவஞ்சகமாக அமைந்துள்ளது. ஆனால், முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் கூட்டத்தினர் காலித் அவர்களின் இந்த ஃபத்வாவை ஒப்புக் கொள்ளவில்லை. மேலும் தமது கைதிகளை மேற்குறிப்பிட்ட சொற்களில் இஸ்லாத்தை வெளிப்படுத்தியதனால் விடுதலை செய்துவிட்டனர். அவர்கள் கொலை செய்வதற்கு பகரமாக அவர்களை விடுதலை செய்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஃபத்வா தெளிவானதாகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களின் கூற்று மேற்குறிப்பிட்ட அறிவிப்பிலிருந்தும் வெளிப்படுகின்றது. அதாவது, கைதிகளை கொலை செய்வது தொடர்பாக ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் கட்டளை அமைந்திருக்கவில்லை. மாறாக, அது ஒரு ஃபத்வாவாக இருந்தது. அதில் கண்ணியம் மிகுந்த ஸஹாபா பெருமக்களில் பெரும்பாலார் உடன்பட்டிருக்கவில்லை. ஒருவேளை அது கட்டளையாக இருந்திருந்தால் அதனை ஏற்றுக் கொண்டிருப்பார்கள்; மேலும், எவரும் அதிலிருந்து கருத்து வேறுபாடு கொண்டிருக்க மாட்டார். ஆனால், ஃபத்வா கொடுப்பதில்

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் சில காரணங்களால் தவறு நிகழ்ந்து விட்டது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு காலித் அவர்களுடைய இந்த மேற்குறிப்பிட்ட தவறினால் கடுமையான துன்பம் ஏற்பட்டது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை ஈடுகட்டுவதற்காக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அனுப்பினார்கள். அன்னார் (ரலி) சென்று, ஒவ்வொரு குழந்தைக்கும் உரிய இழப்பீட்டுத் தொகையை கூட வழங்கினார்கள். எந்த அளவிற்கு என்றால், எவர்களுடைய நாய்கள் கொல்லப்பட்டிருந்தனவோ அந்த நாய்களின் உயிரிழப்பிற்கும் கூட உரிய இழப்பீடு வழங்கப்பட்டது.

ஸீரத் இப்னு ஹஷ்ஷாமில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

கண்டிப்பான கொலைக்கு பகரமான இழப்பீட்டுத் தொகை மட்டுமின்றி அவர்களுக்கு கூடுதல் தொகையும் கொடுக்கப்பட்டது. இமாம் பாகர் (ரஹி) அவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மூலமாக பாதிப்பிற்கான நிவாரணம் மேற்கொண்டதை குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் சண்டையில் அவர்களை கொலையும் கைதும் செய்தார்கள். ஆயுதங்களை கீழே வீசிய பின்னரும் அவர்கள் கொலை செய்யப்பட்டனர் என்பது இதன் பொருள் அன்று. இப்னு ஸஅது அவர்கள் இது தொடர்பாக எந்த அறிவிப்புகளை பதிவு செய்துள்ளார்களோ அவற்றில் ஓர் அறிவிப்பு இப்னு இஸ்ஹாக்கின் சான்றின் அடிப்படையில், ஹஸ்ரத் இப்னு அபீ ஹத்ரத் அஸ்லமா (ரலி) அவர்களுடையதாகும். அவர்கள் அந்தப் படையில் இடம் பெற்றிருந்தார்கள். இப்னு ஸஅது அவர்களின் கூற்றிலிருந்து,சிலர் போரிட்டார்கள் என்பது வெளிப்படுகிறது. மேலும், பனூ ஜஸீமா ஆயுதம் ஏந்தியிருப்பதைக் கண்டு ஹஸ்ரத் காலித் அவர்கள் அந்த மக்களிடம்..

مَا بَالُ السِّلَاحِ عَلَيْكُمْ

என்று கேட்டார்கள் என்ற குறிப்பும் கிடைக்கின்றது. பொருள்: நீங்கள் ஏன் ஆயுதம் ஏந்தியுள்ளீர்கள்?

அதற்கு, எங்களுக்கும் சில அரபுக் கோத்திரத்தாருக்குமிடையில் பழைய பகை இருக்கின்றது. எனவே அந்த மக்கள் நீங்களாக இருப்பீர்களோ? என்று நாங்கள் உங்களைக் குறித்து அஞ்சினோம்; எனவே நாங்கள் ஆயுதம் ஏந்தியிருந்தோம். என்று அவர்கள் கூறினர். ஹஸ்ரத் காலித் அவர்கள் அந்த மக்களை கைது செய்வதற்கு கட்டளையிட்டார்கள். மேலும் அவர்களின் கைகள் கட்டப்பட்டன. மேலும், அவர்கள் தமது தோழர்களுக்கு மத்தியில் பங்கிட்டு விட்டார்கள்.

இமாம் இப்னு ஹஜர் இந்த சான்றை பதிவு செய்து எழுதியுள்ளார்கள்:

சண்டையிட்டவர்கள் சண்டைக்குப் பிறகு தங்களைத் தாங்களே ஒப்படைத்து விட்டனர். இமாம் புஹாரீயின் அறிவிப்பு சுருக்கமாக உள்ளது. மேலும் கிதாப் முகாஸீயின் அறிவிப்பில் எந்த சம்பவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளதோ அவற்றிலிருந்தும் தெளிவாக புலப்படவில்லை. ஆனால், மேலோட்டமாக அதிலிருந்து தெரிய வருகின்றது. அதாவது அந்த தப்லீஃக் திட்டத்தின்போது என்ன மோதல் நிகழ்ந்ததோ அதில் அறியாமைக் காலத்தில் நிகழ்ந்த ஒரு போரின் பங்கும் நிச்சயமாக இருந்தது.

صَبَأْنَا

என்ற சொல்லால் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் மட்டும் சில கைதிகள் கொலை செய்யப்படுவது அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றது. குறிப்பாக முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் கூட்டத்தினர் பகிரங்கமாக ஃபத்வாவிற்கு எதிராக இருந்தனர்.

கதாபீ கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

اَللّٰهُمَّ اِنِّيْ اَبْرَأُ اِلَيْكَ مِمَّا صَنَعَ خَالِدٌ

என்ற இந்த வாக்கியத்திலிருந்து இந்த விஷயம் வெளிப்படுகின்றது. அதாவது, அன்னார் (ஸல்) காலித் அவர்களுடைய அவசரம் மற்றும் .

صَبَأْنَا

என்ற சொல் குறித்து ஆய்வு செய்யாமை போன்றவற்றை தீயதாக கருதினார்கள்.

ஹஸ்ரத் காலித் அவர்கள்

صَبَأْنَا

என்ற சொல்லைக் கூறக் கூடியவர்களின் பொருள் என்ன ? என்பதை அன்னார் முழுமையாக அறிந்து கொண்டிருக்க வேண்டும்

இமாம் பாகர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும், நீங்கள் அந்த மக்களிடம் செல்லுங்கள்; மேலும் அறிவீனமான விஷயங்களை உங்களது காலடியில் போட்டு நசுக்கி விடுங்கள் என்று அன்னாரிடம் கூறினார்கள்.

ஆக, அன்னார் சென்றார்கள். மேலும் அன்னார் ஒருவருடைய இழப்பீட்டை வழங்கினார்கள். இந்த அறிவிப்பிலிருந்து வெளிப்படுகின்றது. அதாவது, நீண்ட கால தனிப்பட்ட பகைமையும், காழ்ப்புணர்ச்சியும், பழிவாங்குதலும் இந்த கொலை சம்பவத்தின் பின்னணியில் செயலாற்றின என்பது இதிலிருந்து வெளிப்படுகிறது. கடந்த காலத்து விஷயங்களை நசுக்கி விடுங்கள் என்று கூறியதிலிருந்து, அவர்களின் உள்ளங்களில் ஏதோ பழைய பகை இருந்தது ; அதுவே கொலைக்கு காரணமாக அமைந்தது என்பது அன்னாருக்கு தெரிந்திருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு படையை அனுப்பி வைக்கும்போது, போரில் அவசரப்படக் கூடாது; மெதுவாக மற்றும் மென்மையை கைகொள்ளவேண்டும்; மேலும் சண்டையிடுவதற்கு முன்னர் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுக்க வேண்டும்; அதன் கட்டளைகளை விளக்கிக் கொடுக்க வேண்டும்; அப்போது தான் சான்று முழுமை செய்யப்படும்; மேலும் எங்கிருந்து பாங்கு சப்தம் கேட்குமோ அங்கு தாக்குதல் தொடுக்கக் கூடாது என்ற வழிகாட்டலையே அன்னார் (ஸல்) வழங்கி வந்தார்கள்.

மேற்குறிப்பிட்ட சம்பவத்தில் பனூ ஜஸீமா கோத்திரத்தின் சார்பாக இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கான தூதுச் செய்தி வந்தடைந்திருந்தது. அதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட படை இந்த விளக்கத்துடன் அனுப்பி வைக்கப்பட்டது. அதாவது,இதன் நோக்கம் இஸ்லாத்திற்கு அழைப்பு விடுவிப்பதே தவிர சண்டையிடுவது அல்ல.

ஆக, தப்காத் இப்னு ஸஅதில் இவ்வாறு உள்ளது. அதாவது ஹஸ்ரத் காலித் பின் வலீத் பனூ ஜஸீமா கோத்திரத்தாரிடம் சென்றடைந்தார்கள். அப்போது, அந்த மக்களிடம், நீங்கள் யார்? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். முஸ்லிம்கள்; நாங்கள் தொழுகின்றோம்; மேலும், முஹம்மது (ஸல்) அவர்களை உண்மையாளர் என்று ஏற்றுக் கொண்டுள்ளோம் ; எங்களது வளாகங்களில் பள்ளிவாசல்களை கட்டியுள்ளோம் மேலும் அவற்றில் பாங்கு கொடுக்கின்றோம் என்று அவர்கள் கூறினர். அப்படியென்றால் நீங்கள் ஏன் ஆயுதம் ஏந்தியுள்ளீர்கள்? என்று ஹஸ்ரத் காலித் அவர்கள் கேட்டார்கள். எங்களுக்கும் அரேபியாவின் ஒரு சமுதாயத்திற்கும் இடையில் பகைமை உள்ளது; அவர்கள் நீங்களாக இருப்பீர்களோ என்ற ஐயம் எங்களுக்கு உருவானது என்று அவர்கள் கூறினர். மேற்குறிப்பிட்ட விளக்கத்திற்குப் பிறகு அந்த மக்களுடன் போர் எந்நிலையிலும் ஆகுமானதாக இருந்திருக்கவில்லை. யலம்லம் பகுதிகளில் நிலைபெற்றிருந்த பழைய பகைமையின் நெருப்பு பற்றிக் கொண்டதாக தெரிய வருகிறது. அதனால் ஒரு தரப்பினருடன் போருக்கான சூழல் உருவானது. மேலும் அதன் பிறகு போர் வீரர்களின் சார்பாக வெளிப்பட்ட صَبَأْنَا என்ற சொல்லின் மூலம் இஸ்லாத்தின் வெளிப்பாடு நிகழ்ந்தபோது அவர்கள் உயிர் பிழைக்க முடியவில்லை. மேலும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் படையின் அமீராக இருந்த காரணத்தால் கோபத்தால் தண்டனை கொடுக்கும் முடிவெடுத்தார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகியோரின் கருத்து வேறுபாடு மற்றும் பரஸ்பர அதிருப்தி தொடர்பான குறிப்பும் இப்னு ஹஷ்ஷாம் நூலில் கிடைக்கின்றது. அந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் இருவருக்குமிடையில் அது ஏற்பட்டது.

عَمِلْتَ بِأَمْرِ الْجَاهِلِيَّةِ فِي الْإِسْلَامِ

என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள்.

பொருள்: நீங்கள் இஸ்லாத்தின் அறிவீனமான காலத்தின் கூற்றை கூறியுள்ளீர்கள். அப்போது,

اِنَّمَا ثَأَرْتَ بِأَبِيْكَ

என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

பொருள்: நீர் என்னிடம் இந்த விஷயத்தை கூறி உமது தந்தையை பழிவாங்கியுள்ளீர். இது சரியல்ல; ஏனெனில், நான் எனது தந்தையின் கொலையாளியைக் கொன்று ஏற்கனவே பழிவாங்கி விட்டேன்; ஆனால், நீங்கள் உங்களது சிறிய தந்தையான ஃபாகிஹஃ பின் முஃகைராவிற்கு பழிவாங்கியுள்ளீர் என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் பதிலளித்தார்கள். இந்த சண்டையால் இருவரும் ஒருவர் மற்றவரிடமிருந்து விலகிக் கொண்டனர். எதுவரை என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த அதிருப்தியைப் பற்றி தெரிய வந்தபோது, அன்னார் (ஸல்), எனது ஸஹாபிகளைக் குறித்து அப்படி எண்ணம் கொள்ளாதீர்கள்; இறைவன் மீது ஆணையாக! (துவக்க கால இந்த ஸஹாபிகள் இருக்கின்றனரே அவர்கள்) உஹது மலையளவிற்கு உங்களுக்கு தங்கம் கிடைத்தாலும் மேலும் அவற்றை நீங்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்தாலும் அப்போதும் கூட எனது ஸஹாபிகளில் எவருடைய அந்தஸ்தையும் பெற முடியாது. அந்த அந்தஸ்து அவர்களுக்கு

காலையிலும் மாலையிலும் அவர்கள் செய்யும் இறை தியானத்தால் கிடைக்கின்றது. என்று காலித் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

ஸீரத் இப்னு ஹஷ்ஷாம் என்ற நூலில் இப்னு இஸ்ஹாக் உடைய இந்த அறிவிப்பும் இடம் பெற்றுள்ளது.அதில் இவ்வாறு வருகின்றது. அதாவது ஃபாகிஹ் பின் முஃகைரா மக்ரூஃமீ, அவ்ஃப் பின் அப்தே அவ்ஃப் ஸுஹ்ரீ மற்றும் அஃப்ஃபான் பின் அபீ அல் ஆஸ் ஆகியோர் ஏமனை நோக்கி வியாபார நோக்கத்திற்காக சென்றனர். மேலும், திரும்பி வரும் வழியில் ஏமனில் மரணித்திருந்த ஜுஸைமீ கோத்திரத்தைச் சார்ந்த ஒருவரின் செல்வத்தை அவருடைய வாரிசுகளுக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்தனர். பனூ ஜஸீமா கோத்திரத்தின் ஒரு நபர் காலித் பின் ஹஷ்ஷாம் என்பவன் வழிப்பாதையில் அவர்களை சந்தித்தான். மேலும், அவருக்கு ஜஸீமீ கோத்திரத்தின் நபருடைய மரணத்தைக் குறித்து தெரிய வந்தபோது, நான் இந்த செல்வத்திற்கு உரிமை படைத்தவன் ஆவேன் என்று கூறினான். அதனை கொடுக்க அவர்கள் மறுத்து விட்டனர். அதனால் அவர்களுக்குள் சண்டை நிகழ்ந்து விட்டது. மேலும் போரில் அவ்ஃப் பின் அப்தே அவ்ஃப் மற்றும் ஃபாகிஹ் பின் முஃகைரா இருவரும் கொல்லப்பட்டனர். மேலும் அஃப்ஃபான் பின் அபீ அல் ஆஸ் மற்றும் அன்னாரின் மகன் உஸ்மான் ஆகியோர் தப்பித்து விட்டனர். அவர்கள் ஃபாகிஹ் பின் முஃகைரா மற்றும் அவ்ஃப் பின் அப்தே அவ்ஃப் ஆகியோரின் செல்வத்தை எடுத்துக் கொண்டனர். மேலும், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் சந்தர்ப்பம் கிடைத்தபோது காலித் பின் ஹஷ்ஷாமைக் கொலை செய்து தமது தந்தையின் கொலைக்கு பழிவாங்கிக் கொண்டார்கள். குறைஷியர்களும் இந்த சம்பவத்தால் கடும் ஆக்ரோஷத்தில் இருந்தனர். மேலும் அவர்கள் பனூ ஜுஸைமா மீது தாக்குதல் நடத்தி தமது கொலையுண்டவர்கள் மற்றும் பொருள் இழப்பிற்கான பழிவாங்குதலை நிகழ்த்துவதற்கு விரும்பினர். அப்போது, பனூ ஜஸீமா கோத்திரத்தார் கூறினர்: உங்களது ஆட்களுடைய கொலை என்பது ஒரு தனிப்பட்ட சம்பவம் ஆகும். இதில் எங்களது எண்ணங்களின் எந்த தலையீடு இருக்கவில்லை. மேலும், எங்களுக்கு அதனைப் பற்றியும் தெரியாது. நாங்கள் கொலையுண்டவர்கள் மற்றும் பொருளாதார இழப்பிற்கான ஈட்டுத் தொகையை கொடுத்து விடுகிறோம். குறைஷியர்கள் அவர்களுடைய வருத்தம் மற்றும் ஆலோசனையை ஒப்புக் கொண்டு விட்டனர். இது ஸீரத் இப்னு ஹஷ்ஷாமில் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், இது பின்னணியில் இருக்கும் சம்பவம் ஆகும். ஏன் பகைமை உருவானது? என்ற சில விஷயங்களுக்கான பின்னணி இதுவாகும். பகைமைக்கு காரணமாக அமைந்த சம்பவங்களில் இந்த ஒரு சம்பவத்தை குறித்தும் எழுதப்பட்டுள்ளது. மேலும் இது சம்பவத்தின் பின்னணியாகும். இதன் காரணமாக ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஆட்சேபனைக்குரியவராக ஆனார்கள். மேலும் ஸஹாபிகள் இதன் காரணமாகவே ஹஸ்ரத் காலித் பின் வலீதுடைய தீர்ப்பு தொடர்பாக மன நிறைவு கொண்டிருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் தரப்பிலிருந்து எவ்வகையான சாக்குபோக்குளையும் உருவாக்கிக் கொள்ள முடியாமல் இருந்தது. ஏனெனில், அவர்கள் இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுக்கும் நோக்கத்திற்காக மட்டுமே அனுப்பப்பட்டிருந்தார்கள். அதில் எவ்வகையான பலவந்தமும் ஆகுமானதாக இருந்திருக்கவில்லை. மேலும், ஸஹாபிகளின் பெரும்பான்மை அன்னாருக்கு நல்ல ஆலோசனை வழங்கியிருந்தது. அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மேலும் பனூ ஜுலைமிற்கு இரவோடு இரவாக தனது கைதிகளை கொலை செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்து விட்டது.

இப்னு இஸ்ஹாக்கின் ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் காலித் பின் வலீதுடைய இந்த காரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது, இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு மக்கள் மறுத்ததை அன்னார் கண்டு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹுஃஸாஃப ஸுஹைமீயின் ஆலோசனையுடன் அவர்களுடன் போர் புரிந்தார்கள். இது தொடர்பாக இப்னு இஸ்ஹாக்கில் இந்த சொற்கள் இருக்கின்றன : ஹஸ்ரத் காலித் அவர்களை இந்த கொலையிலிருந்து குற்றமற்றவராக சிலர் ஆக்குகின்றனர். அவர்களின் கூற்று என்னவென்றால், அப்துல்லாஹ் பின் ஹுஃஸாஃபஃ ஸஹ்மீ அவர்கள், இந்த மக்கள் இஸ்லாத்திலிருந்து விலகி இருந்தால் இந்த மக்களை கொலை செய்வதற்கு உங்களுக்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கட்டளை வழங்கியிருந்தார்கள் என்று அன்னாரிடம் கூறினார்கள். இந்தக் காரணம் சரியானது கிடையாது. ஏனெனில், காலித் அவர்களே அமீராக இருந்தார்களே தவிர அப்துல்லாஹ் பின் ஹுஃஸாஃபஹ் ஸஹ்மீ அவர்கள் அல்ல. இந்த தவறு தெரிந்தே நிகழ்ந்திருந்தது என்றாலும் அல்லது தவறான புரிதலினால் நிகழ்ந்திருந்தாலும் சரியே.

எவ்வாறிருப்பினும், படையின் அமீர் இந்த தவறுக்கு பொறுப்பாளியாக இருந்தார். குறிப்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விசாரணைக்குப் பிறகு காலித் அவர்கள் மீது கடும் அதிருப்தியும் அவர்களிடமிருந்து தொடர்பின்மையையும் அறிவித்திருந்தார்கள்.

எனவே எவ்வாறிருப்பினும், தற்போது நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் இந்த சம்பவம் சாதாரண சம்பவமாக இருக்கவில்லை. நபி (ஸல்) அவர்களின் தீர்ப்பிற்குப் பிறகு காலித் அவர்கள் சரியாக செய்தாரா அல்லது தவறு செய்தாரா? என்று காரணங்களை முன்வைப்பதற்கு இது ஒன்றும் சாதாரண நிகழ்வு அல்ல. நீர் தவறிழைத்துள்ளீர் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; மேலும், தொடர்பின்மையையும் வெளிப்படுத்தினார்கள். நமக்கு இது போதுமானதாகும். எவ்வாறிருப்பினும், காரணங்களை தேடிக் கொண்டிருந்தால் பின்னர் அதனால் மார்க்க சுதந்திரம் தொடர்பாக இஸ்லாம் முன்வைக்கும் அந்த அடிப்படை போதனையில் தாக்கம் ஏற்படும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ போர் புரிபவர்களுடன் போர் புரிவதற்கு அனுமதி நல்கியுள்ளார்கள். மேலும், இஸ்லாத்தின் பிரச்சாரத்தில் மென்மையை கடைபிடிப்பதற்கு கட்டளை வழங்கியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றிக்குப் பிறகு பல்வேறு போர்ப் படைகளை இஸ்லாத்தின் பால் அழைக்கும் நோக்கத்துடன் பல்வேறு அரபுக் கோத்திரங்களை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும், இதில் சண்டையிடுவதிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்று அவர்களின் அமீர்மார்களுக்கு தெளிவான வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள். மகாஸீ மற்றும் வரலாற்றுப் புத்தகங்களில் இந்த விளக்கம் உள்ளது. அதாவது, இந்தக் குழுக்களோ இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தன. ஸீரத் இப்னு ஹஷ்ஷாம் மற்றும் தப்காத் இப்னு ஸஅது ஆகியோருடைய இது தொடர்பான கூற்று எடுத்துரைக்கப்பட்டு விட்டது. அல்லாமா தப்ரீயும் தெளிவான சொற்களில் விளக்கவுரை வழங்கியுள்ளார். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்காவைச் சுற்றிலும் சிறுக் குழுக்களை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் மக்களை சிலை வணக்கத்திலிருந்து விலக்க வேண்டும் மேலும், வல்லமை மிக்க அல்லாஹ்வை வணங்குவதற்காக அவர்களை அழைக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். மேலும், இந்தக் குழுவினர்களுக்கு போர் புரிவதற்கு ஒரு போதும் கட்டளை வழங்கியிருக்கவில்லை.

எவ்வாறிருப்பினும், இன்றைய காலத்து தீவிரவாதத்தை விரும்பும் மவலவிகள் இருக்கின்றனர். அவர்கள் இதே விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு கொலை செய்வதற்கும், போர் புரிவதற்கும் சான்றுகளை எடுக்கின்றனர். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிகவும் தெளிவான போதனை என்னவென்றால், எதிரே நின்று போரிடாத எவருடனும் நீங்கள் போர் புரியக் கூடாது. மேலும் இது குற்றமாகும்.

இமாம் புஹாரீயின் மேற்கண்ட அறிவிப்பிலிருந்தும் இந்த விஷயம் உண்மைப்படுத்தப்படுகின்றது. அதாவது, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் பால் அழைக்கும் பணிக்காகவே பனூ ஜஸீமாவின் பக்கம் அனுப்பப்பட்டிருந்தார்கள்.

فَدَعَاهُمْ إِلَى الْإِسْلَامِ

என்ற இந்தக் கட்டளையினை செயல்படுத்தும் விதமாக அவர்கள் இஸ்லாத்திற்கு அழைப்பு விடுத்தார்கள். நாங்கள் இஸ்லாத்தை தழுவி விட்டோம் என்று அவர்களால் சிறந்த முறையில் கூற முடியவில்லை. நாங்கள் எங்களது மார்க்கத்தை மாற்றிக் கொண்டு விட்டோம் என்று அவர்கள் பதற்றத்தில் கூறினர். இந்த வாக்கியத்தின் தொடர்பு எல்லாக் கோத்திரங்களுடன் இருந்திருக்கவில்லை. ஏனெனில், அவர்களில் பெரும்பாலார் முஸ்லிம்களாகியிருந்தனர். இன்னும் கூறப்போனால், நாங்கள் பழிவாங்கப்படுவோம் என்ற அச்சம் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே இருந்தது. எனவே அவர்கள் ஆயுதங்கள் ஏந்தி போர் புரிய தொடங்கினர். போரில் தமது தோல்வியைக் கண்டு .

صَبَأْنَا

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

என்ற வார்த்தையின் மூலம் இஸ்லாத்தை வெளிப்படுத்தினர்.

இமாம் புஹாரீயின் அறிவிப்பில் மிகவும் உயர் வகையான சுருக்கம் உள்ளது. மேலும், ஆயுதங்களை கீழே போடாதீர்கள்; மாறாக போரிடுங்கள்! என்று ஜஹதம் தமது மக்களுக்கு ஆலோசனை வழங்கினார். இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், முந்தைய இரத்தம் சிந்துதலின் காரணமாக அவர்களுக்கு அச்சம் இருந்தது. இப்னு இஸ்ஹாக் உடைய முந்தைய அறிவிப்புகளில் இந்த சொற்கள் பதியப்பட்டுள்ளன.

பனூ ஜஸீமாவே! நினைவிற் கொள்ளுங்கள்! இவர் காலித் ஆவார். ஆயுதங்கள் கீழே போட்ட பிறகு சிறைப்படுத்தப்படுவீர்கள். மேலும் அதன் பிறகு கழுத்து துண்டிக்கப்படும் என்று ஜஹதம் கூறினார். அவரது சமுதாயத்தைச் சார்ந்த சில மக்கள் அவரைப் பிடித்தனர். மேலும், நீர் இரத்தம் சிந்துதலை விரும்புகிறீரா? மக்கள் முஸ்லிம்களாகி விட்டனர்; அவர்கள் ஆயுதங்களை கீழே போட்டு விட்டனர் என்று அவரிடம் கூறினர். போர் முடிந்து விட்டது; அமைதி நிலவுகின்றது. மக்கள் அவருக்கு புரிய வைத்துக் கொண்டிருந்தனர். மேலும், அவரிடமிருந்து ஆயுதத்தை வாங்கிக் கொண்டு விட்டனர். மேலும் ஹஸ்ரத் காலித் அவர்கள் கூறியதன் அடிப்படையில் மற்ற மக்களும் ஆயுதங்களை கீழே போட்டு விட்டனர். ஸீரத் இப்னு ஹஷ்ஷாமில் இவ்வாறு குறிப்பு உள்ளது.

இந்தக் கூற்றிலிருந்து வெளிப்படையாகும். அதாவது ஜஹ்தமிற்கு ஏற்பட்ட சந்தேகங்கள் என்பது காரணமின்றி இருக்கவில்லை என்பது வெளிப்படுகின்றது. ஸஹாபா பெருமக்கள் கோத்திரங்களின் புதிய முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய மார்க்கத்தின் போதனையை வழங்கும் நோக்கத்துடன் அங்கு சில காலம் தங்கியிருந்தார்கள். அறிவிப்பின்

حَتّٰى اِذَا كَانَ يَوْمُ اَمَرَ خَالِدٌ

என்ற சொற்களிலும் இந்த விஷயம் காணப்படுகின்றது. அவர்கள் தங்கியிருந்த போது விரும்பத் தகாத சூழலும் உருவாகிவிட்டது. அதனால் கோத்திரத்தின் சில மக்களுடன் சண்டை நிகழ்ந்தது. மேலும், அவர்கள் தோல்வியுற்றதால் கைது செய்யப்பட்டனர். மேலும், கைதிகள் முஜாஹித்களிடம் ஒப்படைக்கப்பட்டபோது, சில நபர்களுக்கு அவர்களுடைய பழைய பகைமையினை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. மேலும் அவர்கள் அவர்களை கொலை செய்து விட்டனர்.

இப்னு ஹஷ்ஷாம் இது தொடர்பாக, இப்ராஹீம் பின் ஜஃபர் மஹ்மூதீ அவர்களின் சான்றினால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கனவு மற்றும் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களின் விளக்கத்தையும் குறிப்பிட்டுள்ளார்கள். அதனை நான் முன்னர் எடுத்துரைத்து விட்டேன். அன்னார் பேரீத்தம் பழம் மற்றும் நெய்யினால் தயாரிக்கப்பட்ட சுவை மிகுந்த சில கவளத்தை உண்டார்கள். ஆனால், இறுதியில் ஒரு கவளம் தொண்டையில் சிக்கிக் கொண்டது. மேலும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கையை போட்டு வெளியில் எடுத்து விட்டார்கள். இதன் தொடர்பு தப்லீஃக் குழுக்களுடன் உள்ளது என்று ஹஸ்ரத் அபூ பக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் விளக்கமளித்தார்கள். மேலும், காலித் அவர்களின் தவறுகளை நிவர்த்தி செய்வதற்காக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அனுப்பப்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

இந்தக் கனவிலிருந்து இந்த விஷயம் வெளிப்படையாகும். அதாவது, சம்பவத்தின் தொடர்பு ஜஸீமா கோத்திரத்தின் ஒரு குறுகிய பகுதியினருடன் இருக்கின்றது. மேலும், குறிப்பிட்ட கைதிகளுடன் இருந்ததே தவிர,

صَبَأْنَا صَبَأْنَا

என்று கூறிய அனைத்து கைதிகளும் கொலை செய்யப்பட்டனர் என்பதன்று. உண்மையில், இந்த மக்கள் இஸ்லாத்தில் இணைந்திருக்கவில்லை. மேலும், முந்தைய பழிவாங்குதலின் அச்சமும், பதற்றமும் அவர்களின் மூளைகளில் எந்த அளவிற்கு மேலோங்கி இருந்தது என்றால், அவர்கள் தங்களை தற்காத்துக் கொள்ளும் பொருட்டு போரிடத் துவங்கினர். காலித் அவர்களின் படையில் பங்குபெற்றிருந்த ஸுலைம் பின் மன்ஸூர் மற்றும் மத்லஜ் பின் முர்ரஃ கோத்திரத்தின் சில நபர்கள் தரப்பிலிருந்து அந்த மக்களை பழிவாங்கும் அச்சம் இருந்தது.

ஆக, ஸுலைம் கோத்திரத்தின் நபர்களே தமது கைதிகளை இரவில் கொலை செய்து தங்களது பழிவாங்கலை நிறைவேற்றிக் கொண்டார்கள். முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் கூட்டத்தினரில் எவரும் தங்களிடம் இருந்த கைதிகளை கொலை செய்யவில்லை. இன்னும் கூறப்போனால், அவர்களை விடுதலை செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் அன்னாரின் அழகிய முன்மாதிரியின்படி அமல் செய்தார்கள். (ஸஹீஹ் புஹாரீ, ஹஸ்ரத் ஸய்யிது ஸைனுல் ஆபீதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் அவர்களின் மொழியாக்கம் மற்றும் விளக்கவுரை, தொகுதி 9, பக்கம் 193, 199)

புஹாரீயின் இந்த விளக்கவுரை ஹஸ்ரத் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் அவர்கள் எழுதியுள்ளார்கள். மேலும், கூடுதலாக அன்னார் இந்த ஞானமிக்க குறிப்பையும் எழுதியுள்ளார்கள். அதிலிருந்து, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் எந்தவொரு தவறான எண்ணமும் இருந்திருக்கவில்லை என்ற விஷயமும் அழகிய முறையில் தெளிவாகி விடுகின்றது.

அன்னாரிடம் தவறான புரிதல் ஏற்பட்டு விட்டது. மேலும் அவசரத்தில் அன்னார் ஒரு முடிவெடுத்து விட்டார்கள். மேலும், பின்னர் படையின் அமீர் என்ற அடிப்படையில் என்ன சூழல் உருவானதோ அதற்கு அன்னார் (ரலி) பொறுப்பெடுத்துக் கொண்டார்கள். இதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் மீது கோபமுற்றார்கள்; மேலும் இறைவனின் சமூகத்தில் தமது தொடர்பின்மையையும் வெளிப்படுத்தினார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விவகாரம் முழுவதையும் விசாரணை செய்தபோது, ஒரு தவறான புரிதலின் காரணமாகவே இவர்கள் கொலையுண்டனர் என்பது நிரூபணமானது. அப்போது அன்னார் (ஸல்) கஸாஸ் பழிவாங்குதலுக்குப் பகரமாக இழப்பீட்டுத் தொகையை கொடுப்பதற்கு தீர்மானம் எடுத்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் வருத்தங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலித் அவர்களை மன்னிக்க மட்டும் செய்யவில்லை. அன்னார் (ஸல்) காலித் அவர்களை மன்னித்து விட்டார்கள். இன்னும் கூறப்போனால், சில நாட்களிலேயே ஹுனைன் போருக்காக தயாராக்கப்பட்ட படையின் முன்னணிப் படைப் பிரிவு மற்றும் குதிரை சவாரிகளின் படைக் குழுவின் கண்காணிப்பாளராகவும், படைத் தளபதியாகவும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை நியமித்தார்கள். (எனவே அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டது; அன்னாருக்கு எதிராக துஆ செய்யப்பட்டது; எனவே மிக அதிக கோபம் இருந்தது என்று கூறுவதெல்லாம் சரியானது கிடையாது).

(கஸ்வா ஹுனைன் , முஹம்மது அஹ்மத் இக்பால் எழுதிய நூல், பக்கம் 48, நஃபீஸ் அகடாமி, கராச்சி)

கோபம் அவ்வளவு அதிகமானதாக இருந்திருந்தால் படையின் கண்காணிப்பாளராக நியமித்திருக்க மாட்டார்கள். ஆனால், அன்னார் (ஸல்) அவரை கண்காணிப்பாளராக நியமித்தார்கள். இது மட்டுமின்றி, மேலும் இரண்டு போர்ப் படைகளைப் பற்றிய குறிப்பு கிடைக்கின்றது.

ஸரிய்ய யலம்லம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஷ்ஷாம் பின் ஆஸ் (ரலி) அவர்களின் தலைமையில் இரு நூறு நபர்களை உள்ளடக்கிய ஸரிய்யா மக்காவின் தென்கிழக்கில் அமைந்திருந்த யலம்லம் என்ற இடத்தை நோக்கி அனுப்பினார்கள். அது மக்கா மற்றும் தாயிஃபிற்கு இடையில் இரு இரவுகள் தொலைவில் அமைந்துள்ளது.

ஸரிய்யா உரனஃ

இது அரஃபாத்திற்கு முன்னால் அமைந்துள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்களை முந்நூறு நபர்களைக் கொண்ட படைக்கு அமீராக ஆக்கி அதன் பக்கம் அனுப்பினார்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த போர்ப் படையைப் பற்றிய குறிப்பு முஹம்மது பின் அம்ர் வாக்தீ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவர்களைத் தவிர வேறு எந்த பிரபலமான வாழ்க்கை வரலாற்று ஆசிரியரும் இதனை எடுத்துரைக்கவில்லை. எனவே இது சரியானதா? இல்லையா? என்பதற்கு அப்பாற்பட்டு கூடுதலாக வேறு எந்த விளக்கமும் கிடைப்பதில்லை. எனினும், ஒரு வாழ்க்கை வரலாற்றாசிரியர் இதனை எழுதியுள்ளார். அதாவது நமது அறிவின்படி, எந்தவொரு வரலாற்றாசிரியரும் இந்த இராணுவ நடவடிக்கை குறித்த விளக்கத்தையும் குறிப்பிடவில்லை. அதற்கு காலித் பின் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்கள் உர்னாஃ என்ற இடம் வரை தலைமை தாங்கியிருந்தார்கள். ஆயினும், அது உர்னஃ என்ற இடத்தில் வசித்து வந்த ஹுஸைல் கோத்திரத்தின் பக்கம் அனுப்பப்பட்டது என்பதில் எந்த கருத்து வேறுபாடும் காணப்படவில்லை.

(பாஷமீல் அவர்களின் நூல், ஹுனைன் போர், பக்கம் 35-37, நஃபீஸ் அகாடமி, கராச்சி)

எவ்வாறிருப்பினும், இதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும் தெரிய வருகிறது. அதாவது எங்கேயும் அன்னார் (ஸல்) கடுமை காட்டவில்லை. மேலும், இஸ்லாத்தின் எதிரிகள் சுமத்துகின்ற இந்த குற்றச்சாட்டும் தவறாகும். அதாவது போர்களில் அன்னார் (ஸல்) கொலை செய்ய வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ எங்கு தவறுதலாக ஏதாவது நடந்திருந்தாலும் கூட மிகவும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எஞ்சிய போர்கள் மற்றும் போர்ப் படைகளைப் பற்றிய குறிப்பு இன்ஷா அல்லாஹ்! எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், செப்டம்பர் 5, 2025, பக்கம் 2 - மூ)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

12-ம் பக்கத் தொடர்ச்சி...(குத்பா பேருரை 08.08.25)

மேலும் 1993-ல் ஓய்வு பெற்றார்கள். அதற்குப் பிறகு அன்னார் தமது வாழ்வை அர்ப்பணித்தார்கள். உகாண்டாவில் இரண்டு வருடங்கள் வரை ஒரு புரோக்ஜட்டில் தொண்டாற்ற அன்னாருக்கு வாய்ப்பு கிடைத்தது. அஹ்மதிய்யத்தின் மிக தைரியம் கொண்ட தொண்டராக இருந்தார்கள். படைப்பினங்களுக்கு தொண்டாற்றக் கூடிய பரந்த உள்ளம் கொண்டவராக இருந்தார்கள். பாகுபாடின்றி அனைவரது பொருள் தேவைகளையும் நிறைவேற்ற ஆயத்தமாக இருந்தார்கள். பொருள் தியாகத்தில் முன்னோடியாக இருந்தார்கள். மண்டல காயிதாக இருந்துள்ளார்கள். அன்ஸாருல்லாஹ்விலும் முக்கிய தொண்டுகள் ஆற்றினார்கள். நெடுங்காலம் ஹைதராபாதின் உமூரே ஆமா செயலராக இருந்தார்கள். நவாப் ஷா மற்றும் நஷ்கர், ஃபிரோசானின் மாவட்ட அமீராக இவர்களை நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நியமனம் செய்தார்கள். அந்த பொறுப்பை அன்னார் மிகவும் கடின உழைப்புடன் நிறைவேற்றினார்கள். அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் மூன்று மகன்களும், ஐந்து மகள்களும் இருக்கின்றார்கள்.

அவர்களது ஒரு மகள் ஹுமாரா ஸாஹிபா கூறுகிறார்கள்: படைப்பினங்களுக்கு ஆற்றும் தொண்டுகளை அன்னார் தமது வங்கிக் கணக்கின் இருப்புத் தொகை என்று கூறிவந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கான வழிமுறையாக நம்பி வந்தார்கள். இவர்களின் மூலமாக எண்ணற்ற அஹ்மதி மற்றும் அஹ்மதி அல்லாதார் தங்களது தேவைகளை பூர்த்தி செய்தள்ளார்கள். பாகுபாடின்றி வழிபோக்கர்கள் நோயாளிகள், ஆதரவற்றவர்களது தேவைகளை கருத்தில் கொண்டார்கள். மேலும் பெருந்தொகையையும் வழங்கி வந்தார்கள். ஜமாஅத்துக்காக பொருள் தியாகம் செய்யும் உணர்வும் மேலோங்கி இருந்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நூற்றாண்டு கிலாஃபத் ஜூப்ளியை கொண்டாடுவதற்காக பொருள் தியாகம் செய்யும்படி கூறியதும், உடனடியாக லெப்பைக் என்று கூறியவாறு அடுத்த நாளே ரப்வாவில் தனது வீட்டை விற்று அதன் மொத்த தொகையையும் இதற்காக வழங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் 1966-ம் ஆண்டில் கிலாஃபத்துக்குப் பிறகு சிந்து மாகாணத்தின் சுற்றுப் பயணத்தின்போது ஹைதாராபாத்தில் கோட் அஹ்மதிய்யாவில் உள்ள இவர்களது வீட்டிற்கும் சென்றார்கள். 1981-ல் ரப்வாவில் கிலாஃபத் கோட்டையின் கட்டுமானம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அச்சமயத்தில் இவர்கள் அரசாங்கத்தின் சார்பில் ஆஃப்ரிக்காவுக்கு ஒரு புரோக்ஜெட்டிற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்கள். மேலும் அவர்களுக்கான ஒரு நல்ல சந்தர்ப்பமாக அது இருந்தது. அவர்கள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி)அவர்களிடம் ஆலோசனைக்காக சென்றபோது அன்னார் (ரலி) அங்கு செல்ல வேண்டாம் ; அதனை விட்டு விடுங்கள்; எனது இந்த கிலாஃபத் கோட்டை கட்டப்படுகிறது; அதற்கான கூரை அமைக்கப்படுகின்றது; அதனை மேற்பார்வையிடுங்கள் என்று கூறினார்கள். எனவே அடுத்த நாளே அவர்கள் பணியை மேற்கொண்டார்கள். அங்கேயே இருந்தார்கள். ஆனால், அல்லாஹ்வும் அவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கினான். அதற்குப் பிறகு அவர்கள் விடுமுறை முடிவடைந்ததும் அங்கு திரும்பிச் சென்றதும் அரசாங்கத்தின் தரப்பில் இருந்து அதே கான்ட்ராக்ட் அவர்களுக்கு மீண்டும் கிடைத்தது. இது கிலாஃபத்தின் அருள்தான் என்று கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடனும் நல்ல தொடர்பு இருந்தது. அவர்களும் இவர்களிடத்தில் வருவார்கள். வீட்டிலும் தங்கி இருக்கிறார்கள். அதேபோன்று எனக்கும் நான் பாகிஸ்தானில் இருந்தபோது, அவர்களது வீட்டிற்கு செல்லும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மேலும் அவர்களது வீட்டில் தங்கவும் வாய்ப்பு கிடைத்தது. நன்கு விருந்து உபசரிப்பு செய்பவர்களாக இருந்தார்கள். அதுமட்டுமின்றி ஒருமுறை நான் இரவில் பயணம் செய்ய வேண்டி இருந்தது. சிந்து மாகாணத்தின் நிலைமையும் சரியில்லாமல் இருந்தது. உங்களை நான் அழைத்துச் செல்வேன் என்று அவர்கள் கூறினார்கள். மழையும் பெய்து கொண்டிருந்தது. புயல் மழையாக இருந்தது. சாலைகள் தண்ணீரால் மூழ்கி இருந்தன. ஆனால், எவ்வாறிருப்பினும் இவர்கள் அழைத்துச் சென்றார்கள். நாங்கள் இரவு சென்றடைந்தோம். நாங்கள் அங்கு வீட்டிற்கு சென்றோம். அதற்குப் பிறகு நான் அவர்களிடம் இரவில் இங்கேயே தங்குங்கள் ; காலை சென்று விடலாம் ; தனியாக செல்லாதீர்கள் என்று கூறினேன். அதற்கு, இல்லை! என்று கூறி அப்பொழுதே தமது வண்டியில் மகனுடன் இரவே புறப்பட்டு விட்டார்கள். மிகவும் தைரியம் மிக்க, வீரமிக்க மனிதராக இருந்தார்கள். இறைவழியில் சிறை சென்றவர்களுக்கு இவர்கள் ஆற்றியத் தொண்டும் மதிக்கத்தக்கதாகும். சிறைகளுக்கு சென்று பொறுப்பாளர்களிடம் தொடர்பு கொண்டு அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து வந்தார்கள். மனிதநேய தொண்டின் உணர்வு மிகைத்து இருந்தது. நெருங்கிய உறவினர்களை கருத்தில் கொண்டார்கள். ஏழைகள் தேவை உடையவர்களுக்கு தொண்டாற்றி வந்தார்கள் என்று அவர்களது மகள் கூறுகின்றார்கள். கிலாஃபத்துடன் ஆழமான நேசம் கொண்டிருந்தார்கள். காலத்தின் கலீஃபாவின் குரலுக்கு லெப்பைக் கூறி வந்தார்கள். அவர்களது தினசரி உரையாடலின் ஒரு பகுதியாக கிலாஃபத் இருந்து வந்தது. அவர்களை சந்திக்க வந்த அஹ்மதி அல்லாதவரும் இவர்களது நன்மைகளை பெரிதும் கூறுகிறார்கள். அவர்கள் மீதும் ஒரு நல்ல தாக்கத்தை அன்னார் விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களது ஹல்கா மிகப் பெரியதாகும். அங்குள்ள எல்லா இடங்களிலும் அஹ்மதி என்று அறியப்பட்டு வந்தார்கள். அரசாங்கத்தின் அதிகாரிகள் மற்றும் சிந்துப் பகுதியின் பெரும் அரசியல் குடும்பத்தினர்களுடன் அவர்களுக்கு நல்ல தொடர்பு இருந்தது. அவர்களுக்கு பெரும்பாலும் ஜமாஅத் அச்சிட்ட திருக்குர்ஆனை வழங்கி வந்தார்கள். மேலும் வெளிப்படையாக ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைத்து வந்தார்கள். அது மட்டுமின்றி சாத்தியம் இருந்தால் அவர்களை ரப்வாவிற்கு அழைத்தும் வருவார்கள். அல்லாஹ் அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அவர்களது பிள்ளைகளுக்கும் அவர்களது நன்மைகளை தொடரும் வாய்ப்பினை வழங்குவானாக!

இரண்டாவது நற்குறிப்பு சக் 275, கர்த்தார்பூர், ஃபைஸலாபாத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது அலீ ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்களும் கடந்த நாட்களில் 70 -ம் வயதில் மரணமடைந்துள்ளார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். இவர்களுக்கும் மூன்று மகன்கள் மற்றும் ஐந்து மகள்கள் இருந்தார்கள். அவர்களது ஒரு மகன் லோஸாகஸிம்பியாவின் முபல்லிஃக் ஆவார்கள். இன்றைய நாட்களில் யூ.கே ஆண்டு மாநாட்டிற்காக இங்கு வருகை தந்துள்ளார்கள். இதனால் தந்தையின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. தாஹிர் அஹ்மது ஃசைஃபி ஸாஹிப் முபல்லிஃக் கூறுகின்றார்கள்: தந்தையின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் இரண்டாவது கிலாஃபத்தின் ஆரம்பத்தில் அன்னாரது தந்தை வழிப் பாட்டனார் நுஸ்ரத் ஸாஹிப் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு ஜமாஅத்தில் இணைந்தபோது ஆரம்பமானது. அன்னார் தொழுகை மற்றும் நோன்பை பேணி வந்தார்கள். தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார்கள். இனிய குணம் படைத்தவராகவும், அமைதியான இயல்பை கொண்டவராகவும் இருந்தார்கள். எல்லாரிடமும் அன்பாக பழகி வந்தார்கள். படைப்பினங்களுக்கு தொண்டாற்றும் உணர்வால் நிரம்பியிருந்தார்கள். இன்முகத்துடன் பேசக் கூடிய, நல்ல மற்றும் தூய மனிதராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் அளவற்ற நேசம் இருந்தது. எந்தப் பணியானாலும் முதலில் காலத்தின் கலீஃபாவுக்கு கடிதம் எழுதி துஆவுக்காக கூறுவார்கள். ஜமாஅத் மற்றும் மார்க்க நிகழ்ச்சிகளில் அமைதியாக பங்கு பெறுவார்கள். மேலும் இயன்ற வரை தனது தகுதிக்கு ஏற்ப பொருள் தியாகத்திலும் பங்கு பெற்று வந்தார்கள். MTA ஆரம்பிக்கப்பட்டபோது அச்சமயம் அவர்களது வீட்டில் டி.வி இருக்கவில்லை. MTA ஆரம்பம் ஆனதும் உடனடியாக வீட்டிற்கு டி.வி வாங்கி வந்தார்கள். காலத்தின் கலீஃபாவின் எந்தவொரு திட்டத்திலும் முன்னால் சென்று பங்கெடுக்காமல் இருந்ததாக எனக்கு நினைவு இல்லை. பிறரிடத்திலும் அவர்கள் பரிவுடன் நடந்து வந்தார்கள். இவர்கள் ஒரு தொழிற்சாலையில் பணியாற்றி வந்தார்கள். ஆனால், அஹ்மதி அல்லாதவர்களது பழக்கமாகும். சிலருக்கு இந்த அளவுக்கும் பொறுமை இருக்காது. அதாவது அவர்களுக்கு எவ்வளவு நன்மை செய்தாலும் அவர்கள் மக்களுடைய பேச்சுக்கு கட்டுப்பட்டு எஜமானர்களிடம் கூறி அவர்களை பணியிலிருந்து விலக்க வலியுறுத்துவார்கள். இவ்வாறாக அவரை பணியிலிருந்து நீக்கி விட்டனர். ஆனால், இவர்கள் எந்தக் கூச்சலும் இடவில்லை. அல்லாஹ்விடம் முறையிட்டார்கள். சில காலத்திற்குப் பிறகு தொழிற்சாலையின் முதலாளி மீண்டும் இவர்களை அழைத்து அங்கேயே அதே நிலையில் அவர்களை மீண்டும் பணியில் அமர்த்தினார்கள். ஆனால், அவர்கள் இவர்களுடன் தகாத முறையில் நடந்து கொண்ட மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். அவர்களது பணிகளை செய்து வந்தார்கள். தப்லீஃக்கை விட அவர்களது நன்னடத்தை மிகவும் சிறந்ததாக இருந்தது. அதன் காரணத்தினால் ஃபைஸலாபாத் நகரில் எட்டு நபர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

அல்லாஹ் அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அவர்களது பிள்ளைகளுக்கும் அவர்களது நன்மைகளை தொடரும் வாய்ப்பினை வழங்குவானாக!

தமிழாக்கம்
முரப்பி
முஹம்மது சுல்தான் மைதீன்

* * * * * * * *

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

1-ம் பக்கத் தொடர்ச்சி...(தஃப்ஸீரே கபீர் )

அவனுக்கு ஒரு புதிய ஆன்மிக பிறப்பு கிடைத்து விடுகின்றது. மேலும், மனிதத்துவம் தனது சிறப்பின் உச்சத்தை அடைந்து விடுகின்றது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6.பக்கம் 143 - 144, காதியான் பதிப்பு 2010)

* * * * * * * *

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றியின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு & சிந்து மாகாணத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சவ்த்ரி அப்துல் ஃகஃபூர் ஸாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய முஹம்மது அலி ஸாஹிப் மர்ஹூம் ஆகியோரின் நற்குறிப்பும் ஜனாஸா தொழுகையும்**

மக்களின் உள்ளங்களிலிருந்து அவர்களின் கற்பனையான அச்சமும், மகத்துவமான எண்ணமும் அகன்று விட வேண்டும் என்பதற்காக சிலைகளின் பீடங்களை அழித்து விடுவதற்கான கட்டளையை மக்கா வெற்றிக்குப் பிறகு உடனடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கினார்கள் இந்த நுட்பமான ஞானம் நிறைந்த போதனை அருளுக்குரியதாக நிரூபணமானது ஏனெனில் அவற்றை அகற்றியதன் மூலம் மக்களின் உள்ளங்களிலிருந்து சிலைகளின் மீதான அச்சமும் ஆதிக்கமும் நீங்கிவிட்டது. மேலும் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன்வைத்த ஏகனும் தனித்தவனுமாகிய அந்த இறைவனைப் பற்றிய சிந்தனையே சரியானதாகும் என்பதில் அவர்களுக்கு உறுதி ஏற்பட ஆரம்பித்தது

குரேஷிய தலைவர்களுள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஸுஹைலை விட அதிகமாக தொழுகை மற்றும் நோன்புகளை பேணக் கூடிய மற்றும் ஸதக்கா வழங்கக் கூடிய மனிதர் எவரும் இருக்கவில்லை. அதிக அதிகமாக அழுது மன்றாடக் கூடியவராக இருந்தார். திருக்குர்ஆனை ஓதும் போது பெரும்பாலும் அழுது வந்தார் இறைவன் மீது ஆணையாக! அன்னார் குழந்தை பருவத்திலும் நன்மை செய்யக் கூடியவராக இருந்தார். இந்த வயதிலும் நன்மை செய்யக் கூடியவராக இருக்கின்றார் என்று ஸுஹைல் கூறினார்

மக்கா வெற்றி சந்தர்ப்பத்தின்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்கத்து தலைவர்களுள் பெரும்பாலார் பிற்காலத்தில் தங்களது வாழ்வில் ஒரு மாபெரும் ஆன்மிகப் புரட்சியை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08 ஆகஸ்ட் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுஹூர்** மாதம் **08 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

**சென்ற இதழின் தொடர்ச்சி....**

அதற்கு, நீங்கள் எனக்கு நான் அறிந்த ஏதேனும் ஓர் அடையாளத்தை காண்பிக்கும் வரை நான் உங்களுடன் திரும்பி வரமாட்டேன் என்று ஸஃப்வான் ஹஸ்ரத் உமைரிடம் கூறினார். அப்போது, அவர் அன்னார் (ஸல்) வழங்கிய தலைப்பாகையை காண்பித்தார். ஸஃப்வான் ஹஸ்ரத் உமைருடன் வந்துவிட்டார். அவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது சமூகத்தில் ஆஜரானார். அந்த நேரம் அன்னார் (ஸல்) மஸ்ஜிதில் ஸஹாபிகளுடன் அஸர் தொழுகையை தொழுது கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) ஸலாம் கூறியதும் ஸஃப்வான் உரத்தக் குரலில், முஹம்மது (ஸல்) அவர்களே! உமைர் என்னிடத்தில் தாங்கள் எனக்கு பாதுகாப்பு வழங்கியுள்ளீர்கள் என்று கூறி தங்களது போர்வையை கொண்டு வந்துள்ளார் என்று கூறினார். ஆம்! முற்றிலும் உண்மையாகும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அதற்கு, எனக்கு இரண்டு மாத கால அவகாசம் வழங்குங்கள்; தற்போது நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை என்று கூறினார். அதற்கு, நான்கு மாத கால அவகாசம் வழங்கப்படுகிறது; நீர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வீர்! என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எனவே ஸஃப்வான் இணை வைப்பாளராக இருந்த நிலையில், மக்காவில் வசிக்கத் தொடங்கினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுனைனின் சென்றார்கள். தாயிஃப் போர் மற்றும் ஹுனைன் போருக்குப் பிறகு போர் செல்வங்களை விநியோகித்தார்கள். அப்போது அன்னார் (ஸல்) ஸஃப்வானைப் பார்த்தார்கள். அவர் ஆடுகள் நிறைந்த பள்ளத்தாக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தொடர்ந்து அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். செல்வங்கள் நிறைந்திருந்த பள்ளத்தாக்கை பார்த்துக் கொண்டிருந்த ஸஃப்வானை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தப் பள்ளத்தாக்கில் இவ்வளவு செல்வங்கள் நிறைந்துள்ளனவே! என்று இந்தப் பள்ளத்தாக்கு உம்மை வியப்பிற்கு உள்ளாக்கியுள்ளதா? என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, ஆம்! என்று ஸஃப்வான் கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தப் பள்ளத்தாக்கும் அதில் உள்ளவை அனைத்தும் உமக்கே ஆகும்; அவற்றை எடுத்துச் செல்லும் என்று கூறினார்கள். அவற்றின் அனைத்துச் செல்வங்களையும் ஸஃப்வான் கைப்பற்றிக் கொண்டார். மேலும் எவ்வளவு அழகிய முறையில் நபியின் ஆன்மா தானம் செய்கின்றதோ அவ்வாறு வேறு எவராலும் செய்ய முடியாது. நான் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவரும் இல்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், திருத்தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன் என்றார். அவ்விடத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார். ஸஃப்வான் மக்காவில் ஹிஜ்ரீ 42-ம் ஆண்டு ஹஸ்ரத் முஆவியாவின் கிலாஃபத் காலத்தில் மரணமடைந்தார்கள். சிலர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத்தின் போது நிகழ்ந்த கலவரத்தின்போது ஷஹீதானார்கள் என்றும் கூறுகின்றார்கள்.

மக்கா வெற்றியின் போது, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட இந்த மக்காவின் தலைவர்களில் பெரும்பாலோர் பின்னர் தங்களுடைய வாழ்வில் ஒரு மகத்தான ஆன்மிகப் புரட்சியை உருவாக்கி இருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதனை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருமுறை தமது கிலாஃபத் காலகட்டத்தில் மக்காவிற்கு சென்றபோது, நகரத்தின் பிரபலமான குடும்பங்களைச் சேர்ந்த பெருந்தலைவர்கள் அவர்களை சந்திக்க வந்திருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நமது குடும்பங்களைப் பற்றி நன்கு அறிந்தவராவார்கள்; அவர்களே தற்போது மன்னராக இருக்கின்றார்கள்; நமது குடும்பங்களுக்கும் முழுவதுமாக கண்ணியம் வழங்குவார்கள்; மேலும் நாம் தொலைந்து போன நமது கண்ணியத்தை மீண்டும் பெற்று விடலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது. எனவே அவர்கள் வந்தனர். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், அவர்கள் பேசத் தொடங்கினர். அந்த நேரம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சபையில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் வந்தார்கள். சிறிது நேரம் கழித்து ஹஸ்ரத் ஹூப்பாப் (ரலி) அவர்கள் வந்தார்கள். மேலும் இவ்வாறாக, ஒருவர் பின் ஒருவராக துவக்க காலத்தில் நம்பிக்கை கொண்ட அடிமைகள் வந்து கொண்டே இருந்தார்கள். அதாவது ஆரம்பத்தில் ஈமான் கொண்ட அடிமைகள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வந்து விட்டனர். இவர்கள் அந்த தலைவர்கள் அல்லது அவர்களுடைய தந்தைமார்களுக்கு அடிமைகளாக இருந்த மக்களாவர்.

எவ்வாறாயினும் அந்தத் தலைவர்கள்


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/33, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 633751327 gemscertify22@gmail.com

#12, KNG Garden, Sundakamuthur Main Road, Kuniyamuthur, Coimbatore - 641 008.
93632 27229
successraoof@gmail.com
SUCCESS INDIA
PROMOTERS
M. Abdul Raoof
93632 27229

அமர்ந்திருந்தார்கள். நான் கூறியதுபோன்று, வந்து கொண்டிருந்த அனைவரும் அவர்களது மூதாதையர்களுக்கு அடிமைகளாக இருந்த மக்களாவர். இவர்கள் அடிமைகளாக இருந்தபோது, இந்த மக்கள் ஆற்றல் பெற்றிருந்த காலத்தில் இம் மக்கள் அவர்கள் மீது கடும் அநீதியிழைத்து வந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒவ்வோர் அடிமை வருகை தரும்போதும்.அவர்களை வரவேற்று வந்தார்கள். அதாவது அந்த அடிமைகள் முன்பு அடிமைகளாக இருந்தனர். தற்போது கண்ணியத்திற்குரிய மக்களாவார்கள். அவர்களை கண்ணியத்திற்குரியவர்களாக கருதி வரவேற்றார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒவ்வோர் அடிமையின் வருகையின்போதும், தலைவர்களை வரவேற்பது போன்று அவர்களை வரவேற்றார்கள். மேலும் தலைவர்களிடம், நீங்கள் சற்று பின்னால் செல்லுங்கள் என்று கூறினார்கள். தலைவர்கள் அந்தக் கூட்டத்தில் முன்னால் அமர்ந்திருந்தார்கள். இந்த பழைய நம்பிக்கையாளர்கள் வரத் தொடங்கியதும் அன்னார் (ரலி) அந்த தலைவர்களை அதாவது மக்காவில் தலைவர்களாக இருந்தவர்களை சற்று பின்னால் செல்லுங்கள் ; அவர்களை அமர விடுங்கள் என்று கூறினார்கள். எதுவரை என்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை சந்திக்க வந்த அந்த இளம் தலைவர்கள் பின்னால் விலகி விலகி வாசலின் பக்கம் சென்று விட்டார்கள். அக்காலகட்டத்தில் எந்தவொரு பெரிய ஹாலும் இருக்கவில்லை. ஒரு சிறிய அறை இருந்திருக்கும். மேலும் அவர்கள் அனைவரும் அதில் அமர முடியாது. எனவே பின்னால் விலகி தலைவர்கள் காலணிகளில் அமர நேர்ந்தது. மக்காவின் அந்த தலைவர்கள் காலணிகள் வரை வந்து விட்டதும், அவர்கள் தங்கள் கண்களால் இதனைக் கண்டார்கள்: எவ்வாறு ஒருவர் பின் ஒருவராக முஸ்லிம் அடிமைகள் வந்தனர். மேலும் அவர்களை முன்னால் அமர வைப்பதற்காக இவர்களை அதாவது தலைவர்களை பின்னால் விலகிச் செல்ல கட்டளை வழங்கப்பட்டது என்பதை அவர்கள் தங்களின் கண்களால் கண்டனர்.ஆக, இது அவர்களது உள்ளத்தில் பெரும் காயத்தை ஏற்படுத்தியது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

இறைவனும் அத்தருணத்தில் இவ்வாறான சூழ்நிலையை உருவாக்கி இருந்தான். ஒருவர் பின் ஒருவராக ஒரு காலகட்டத்தில் நிராகரிப்பாளர்களுக்கு அடிமைகளாக இருந்த முஸ்லிம்கள் வந்து விட்டனர். ஒருவேளை ஒருமுறை அந்த தலைவர்கள் பின்னால் நகர்ந்து சென்றிருந்தால் அவர்களுக்கு எந்தவோர் உணர்வும் இருந்திருக்காது. ஆனால், மீண்டும், மீண்டும் அவர்கள் பின்நோக்கி நகர வேண்டியிருந்ததால் அவர்களால் இந்த விஷயத்தை தாங்கிக் கொள்ள முடியவில்லை. மேலும் எழுந்து வெளியே சென்று விட்டார்கள். வெளியே வந்து அவர்கள் ஒருவர் மற்றவரிடம், பாருங்கள்! இன்று நமக்கு எவ்வளவு இழிவு மற்றும் ஏளனம் ஏற்பட்டுள்ளது; ஒவ்வோர் அடிமையாக வந்தபோதெல்லாம் நாம் பின்னுக்குத் தள்ளப்பட்டோம். எது வரை என்றால், நாம் காலணிகளை சென்றடைந்தோம் என்று குறை கூறலாயினர். அதற்கு, அவர்களில் ஓர் இளைஞர் இதில் யாருடைய தவறு இருக்கின்றது? உமர் அவர்களுடையதா? அல்லது நம்முடைய மூதாதையர்களுடையதா? நீங்கள் சிந்தித்துப் பார்த்தீர்கள் என்றால், இதில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் எந்தத் தவறும் இல்லை என்பது உங்களுக்கு புரிய வரும். நமது மூதாதையர்களுடைய தவறாகும். அதற்கான தண்டனை இன்று நமக்கு கிடைத்தது. ஏனெனில், இறைவன் தனது தூதரை அனுப்பியபோது நமது மூதாதையர்கள் எதிர்த்தனர். ஆனால், இந்த அடிமைகள் அவரை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் எல்லாவிதமான துன்பங்களையும் மகிழ்ச்சியுடன் பொறுத்துக் கொண்டனர். எனவே இன்று நமக்கு ஒரு வேளை இந்தக் கூட்டத்தில் இழிவை சந்திக்க வேண்டியது வந்தது என்றால், அதில் உமர் (ரலி) அவர்களின் மீது எந்தத் தவறும் இல்லை. அது நமது தவறே ஆகும் என்று கூறினார். அவரது இந்த வார்த்தைகளை கேட்டு விட்டு மற்றவர்கள் இவ்வாறு கூறினர்:

அதாவது இது நமது மூதாதையர்களுடைய தவறின் விளைவாகும் என்பதை நாங்களோ ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், இந்த இழிவின் களங்கத்தை போக்க ஏதேனும் வழி இருக்கின்றதா? இல்லையா? இது குறித்து அனைவரும் நமக்கு ஒன்றும் புரியவில்லை ; ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடமே சென்று இதற்கான சிகிச்சை என்ன என்று கேட்போம் என்று ஆலோசனை செய்தனர். அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தனர். மேலும், இன்று எங்களுடன் நடந்ததை தாங்களும் நன்கு அறிவீர்கள்; நாங்களும் நன்கு அறிவோம் என்று கூறினர். அதற்கு, மன்னித்து விடுங்கள் ; நான் கட்டாயத்திற்கு ஆளாகியிருந்தேன்; ஏனெனில், இந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபைகளில் கண்ணியத்திற்குரியவர்களாக இருந்தார்கள்; அநேகமாக உங்களது அடிமைகளாக இருந்திருக்கலாம்; ஆனால், இறைத் தூதர் (ஸல்) அவர்களுடைய சபைகளில் இந்த மக்கள் கண்ணியத்திற்குரியவர்களாக இருந்தார்கள். எனவே அவர்களுக்கு கண்ணியம் அளிப்பது எனது கடமையாக இருந்தது என்று கூறினார்கள். அதற்கு, அவர்கள் எங்களுக்கு தெரியும்; இது எங்களது தவறின் விளைவே ஆகும். ஆனால், இந்தக் களங்கத்தை துடைப்பதற்கு வேறு ஏதும் வழி இருக்கின்றதா? என்று அவர்கள் கேட்டனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாமோ கற்பனையும் செய்து பார்க்க முடியாது. இன்றைய காலத்தில் இங்கு அமர்ந்திருக்கின்ற நம்மால் அதனைக் குறித்து அனுமானம் செய்ய முடியாது. மக்காவின் தலைவர்களாக இருந்த அம்மக்களாகிய அவர்களுக்கு மக்காவில் எந்த அளவிற்கு மதிப்பு செல்வாக்கு படைத்திருந்தனர் என்பதை இன்றைய நாட்களில் அனுமானம் செய்வது மிகவும் கடினமாகும். ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த மக்களின் குடும்ப நிலையை நன்கு அறிந்தவர்களாக இருந்தார்கள். அன்னார் (ரலி) மக்காவில் பிறந்தார்கள். மக்காவில் வளர்ந்து பெரியவரானார்கள். எனவே அவர்கள் இந்த இளைஞர்களுடைய மூதாதையர்கள் எந்த அளவிற்கு கண்ணியத்திற்குரியவர்களாக இருந்தார்கள் என்பதை நன்கு அறிந்திருந்தார்கள். எந்தவொரு நபரும் அவர்கள் முன்னிலையில் பார்வையை உயர்த்திப் பார்ப்பதற்கும் கூட தைரியம் கொண்டிருக்கவில்லை என்பதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிந்திருந்தார்கள். மேலும் அவர்களுக்கு எந்த அளவிற்கு ஆளுமையும், திகிலும் இருந்தது என்பதை அன்னார் அறிந்திருந்தார்கள். அவர்கள் இந்த விஷயத்தைக் கூறியதும் அன்னாருக்கு ஒன்றன் பின் ஒன்றாக அந்த அனைத்து சம்பவங்களும் (கண்) முன்னால் வந்துவிட்டன. மேலும் அன்னாருக்கு நடுக்கம் ஏற்பட்டது. அப்போது நடுக்கத்தின் காரணமாக அன்னாரால் பேச முடியவில்லை. அன்னார் கையை மட்டும் உயர்த்தி வடக்கு திசையை நோக்கி விரலால் சைகை செய்தார்கள். அதன் பொருள் என்னவென்றால், வடக்கில் அதாவது சிரியாவில் சில இஸ்லாமிய போர்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒருவேளை நீங்கள் அந்தப் போர்களில் கலந்து கொண்டால் அதற்கான பரிகாரமாக அது இருக்கலாம் என்பதாகும். எனவே அவர்கள் அங்கிருந்து எழுந்தார்கள். மேலும் விரைவாகவே அந்தப் போர்களில் கலந்து கொள்வதற்காக செல்ல தொடங்கினர். வரலாறு கூறுவது என்னவென்றால், அந்த தலைவர்களின் மகன்களில் எவரும் உயிருடன் திரும்பி வரவில்லை. அனைவரும் அதே இடத்தில் ஷஹீதானார்கள். இவ்வாறாக அவர்கள் தங்களுடைய குடும்பங்களின் பெயர்களின் மீது இருந்த களங்கத்தை துடைத்தார்கள்.

இந்தத் தலைவர்கள் யர்மூக் போரில் உயிரை பொருட்படுத்தாமல் புகழத் தக்க வகையில் தைரியத்தை வெளிப்படுத்தினார்கள் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

போர் முடிவுற்றதும் முஸ்லிம்கள் குறிப்பாக இக்ரிமா மற்றும் அவருடன் இருந்தவர்களை தேடினார்கள். அவர்கள் கண்டது என்னவென்றால், அந்த மனிதர்களில் 12 பேர் கடுமையாக காயமுற்றிருந்தார்கள். அவர்களில் இக்ரிமாவும் ஒருவராவார். ஒரு முஸ்லிம் போர் வீரர் அவர் அருகில் சென்றார். மேலும் இக்ரிமாவின் நிலையைக் கண்டார். நிலைமை மிக மோசமாக இருந்தது. அவர் இக்ரிமாவே! என்னிடம் தண்ணீர் பை இருக்கின்றது. நீ சிறிது தண்ணீரை அருந்து என்று கூறினார். இக்ரிமா முகத்தை திருப்பி பார்த்தபோது, அருகிலேயே ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் மகன் ஹஸ்ரத் ஃபஸ்ல் காயமுற்ற நிலையில் கிடந்தார். இக்ரிமா அந்த முஸ்லிமிடம் நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கடும் எதிரியாக இருந்த போது எந்த மக்கள் அன்னாருக்கு உதவினார்களோ அவர்களது பிள்ளைகள் தாகத்தால் இறக்க நான் தண்ணீர் அருந்தி உயிருடன் இருப்பதை என்னுடைய தன்மானம் பொறுத்துக் கொள்ளாது.பிறருக்காக தியாகம் செய்யக் கூடிய ஒரு புத்துணர்வு அவர்களிடத்தில் உருவாகி இருந்தது. எனவே முதலில் அவருக்கு அதாவது ஹஸ்ரத் ஃபஸ்ல் பின் அப்பாஸுக்கு தண்ணீர் கொடுங்கள்; ஒருவேளை எஞ்சி விட்டால் பிறகு என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்று கூறினார். அந்த முஸ்லிம் ஹஸ்ரத் ஃபஸ்லிடம் சென்றார். அவர் மற்றொரு காயமுற்றிருந்த நபரை நோக்கி சைகை செய்தார். மேலும் அவருக்கு தண்ணீர் கொடுங்கள்; அவர் என்னை விட அதிக தேவையுடையவர் ஆவார் என்று கூறினார். அவர் அந்த காயமுற்றவரிடம் சென்றார். அவர் அடுத்த காயமுற்ற நபரை நோக்கி சைகை செய்து, அவர் என்னை விட அதிக தேவையுடையவர் ஆவார்; முதலில் அவருக்கு தண்ணீர் கொடுங்கள் என்று கூறினார்.இவ்வாறாக எந்த போர் வீரரிடத்தில் சென்றாலும் அவர் மற்றவரிடத்தில் அவரை அனுப்பி வைத்தார். மேலும் எவரும் தண்ணீர் அருந்தவில்லை. அவர் இறுதியாக காயமுற்றவரிடத்தில் சென்றபோது அவர் இறந்து விட்டிருந்தார். அவர் இரண்டாம் நபரை நோக்கி வந்தார். எதுவரை என்றால் இக்ரிமா வரை வந்தார். ஆனால், அவர்கள் அனைவரும் இறந்து விட்டிருந்தனர்.(ஹூர் அஹ்மதி அஹ்மதிய்யத் கி ஸதாகத் கா ஏக் ஸிந்தா நிஷான் ஹே, அன்வாருல் உலூம், தொகுதி 26, பக்கம் 230-




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 18 SEP 2025 Issue No. 38

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

231)

இறைவன் பால் அழைக்கும் பணிக்காக மற்றும் சில பெரிய சிலைகளை அழிப்பதற்காக இறைத் தூதர் (ஸல்) அவர்கள் குழுக்களை நியமனம் செய்திருந்தார்கள். அவர்களை புறப்படச் செய்தார்கள். அதன் குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல்வேறு இடங்களை நோக்கி படைகளை அனுப்பி வைத்தார்கள். அடிப்படையில் இது போர் புரிவதற்காக இருக்கவில்லை. அவர்களது நோக்கம் இறைவழியில் தூதுச் செய்தியை எட்ட வைப்பதாக இருந்தது. மேலும் சில இடங்களில் நிறுவப்பட்டிருந்த சிலைகளை அழிப்பதற்காக இருந்தது. அவை ஏகத்துவத்தின் மீது ஈமான் கொள்வதில் ஒரு தடையாக இருந்தது. அதன் மீது பொய்யான மற்றும் பகட்டான அச்சம் மக்களுடைய உள்ளங்களில் உறைந்திருந்தது. மேலும் அவர்களது இந்த எண்ணம் ஏக இறைவன் மீது ஈமான் கொள்வதில் தடையாக உருவாகி இருந்தது. அரேபியர்களில் பெரும்பான்மையினரின் உள்ளத்தில் மூன்று சிலைகள் அல்லது பெண் தெய்வங்களுக்கு பெரும் மேன்மை இருந்தது. அவற்றின் பெயர்கள் லாத், மனாத் மற்றும் உஸ்ஸா ஆகும். லாத் தாயிஃபில் இருந்த பெண் தெய்வம் ஆகும். அரேபியா முழுவதிலும் அதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வந்தது. மக்கள் அதன் பெயரால் சத்தியம் செய்து வந்தனர். மேலும் அதற்கு நேர்ச்சைகள் செய்து வந்தனர். அரேபியர்களிடத்தில் சிலை வணக்கத்தின் முன்னோடியாக கருதப்பட்டு வந்த அம்ர் பின் லஹ்யீ மக்களது உள்ளங்களில் அல்லாஹ் குளிர்காலத்தில் தாயிஃபில் லாத்திடமும், கோடை காலத்தில் உஸ்ஸாவிடமும் இருந்து வந்தான் (நவூதுபில்லாஹ்) என்ற எண்ணத்தை உருவாக்கி இருந்தான். மனாத் என்பது அரேபியர்களின் தொன்மையான சிலையாக இருந்தது. இது கடற்கரையோரம் கதீதில் மக்கா மற்றும் மதீனாவுக்கு இடையில் இருந்தது.அரேபியர்கள் இதற்கு கண்ணியம் செலுத்தி வந்தார்கள். மேலும், அதற்கு குர்பானிகளை வழங்கி வந்தனர். அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் குறிப்பாக இதற்கு எந்த அளவுக்கு மேன்மை வழங்கி வந்தனர் என்றால், அவர்கள் மனாத்தின் பெயரில் இஹ்ராம் கட்டி வந்தார்கள். இதன் மேன்மை மற்றும் கண்ணியத்தை முன்னிறுத்தியவாறு ஸஃபா மற்றும் மர்வாவுக்கு இடையில் வலம் வராமல் இருந்தனர். ஹஜ் செய்யும்போது, தங்களது தலைகளை மழித்து வந்தனர்.அது மட்டுமின்றி, திரும்பி வரும்போது மனாத்திடம் வந்து தலையை மழித்து அங்கு தங்கி சென்றனர். மேலும் அதை செய்யாவிட்டால் தங்களது ஹஜ் முழுமையடையவில்லை என்று அவர்கள் கருதி வந்தனர். உஸ்ஸா, நஹ்லாவுக்கு அருகில் இருந்த குரேஷியர்களின் எல்லாவற்றையும் விட பெரிய சிலையாகும். அவர்கள் அதற்காக ஒரு பலிபீடத்தையும் உருவாக்கி இருந்தார்கள். அதில் அவர்கள் தங்களுடைய விலங்குகளை குர்பானி செய்து வந்தார்கள். அதனுடைய பெயரை தங்களது மக்களின் பெயராக சூட்டி வந்தார்கள். மேலும் அதன் மீது சத்தியம் செய்து வந்தார்கள். சிலை வணக்கத்தின் முன்னோடியாக அரேபியர்களால் கருதப்பட்டு வந்த அம்ரு பின் லஹ்யீ என்பவன் அந்த மக்களின் உள்ளங்களில் எந்த அளவிற்கு சிலைகள் பற்றிய தவறான எண்ணங்களை கடுமையாக விதைத்திருந்தான் என்றால், அதனால் மக்கள் அந்த சிலைகளைக் கண்டு மிகவும் அஞ்சியும் வந்தனர். மேலும், நான் முன்னர் கூறியது போன்று, பெரும் கண்ணியம் வழங்கி வந்தனர். அவர்களுடைய கருத்தின்படி, அல்லாஹ் வெவ்வேறு பருவ காலங்களில் இந்த சிலைகளிடம் நாளைக் கழித்து வந்தான். நவூதுபில்லாஹ்!

எவ்வாறிருப்பினும், இவ்வாறான கற்பனைகளால் உஸ்ஸாவின் மேன்மை எந்த அளவுக்கு மக்களுடைய உள்ளங்களில் உருவாக்கப்பட்டு விட்டது என்றால் கஅபாவை நோக்கி எவ்வாறு ஹதியா மற்றும் நேர்ச்சைகளை வழங்கி வந்தார்களோ அவ்வாறே அவர்கள் உஸ்ஸாவை நோக்கியும் கொண்டு சென்றார்கள். இந்த சிலையைத் தான் உஹது போரின்போது, அபூஸுஃப்யான் வெற்றியின் மகிழ்ச்சியில் உரக்கக் கூறினான்.

إِنَّ لَنَا الْعُزّٰى وَلَا عُزّٰى لَكُمْ

பொருள்: எங்களுக்கு உஸ்ஸா இருக்கின்றது; உங்களுக்கு எந்த உஸ்ஸாவும் கிடையாது; இவ்வாறாக பொதுவாக அரேபியர்கள் இந்த மூன்று சிலைகளுக்கு கண்ணியமளித்து வந்தனர். மேலும் உஸ்ஸா குறைஷியர்களுக்கு குறிப்பானதாக இருந்தது. அரேபியர்கள் கருத்துப்படி இந்த மூன்றும் பெண்களாக இருந்தன. அதாவது தேவிகளாக இருந்தன. திருக்குர்ஆன் இந்த மூன்றைப் பற்றியும் எடுத்துரைத்தவாறு கூறுகிறது:

اَفَرَءَيْتُمُ اللّٰتَ وَالْعُزّٰى ﴿۲۰﴾ وَمَنٰوةَ الثَّالِثَةَ الْاُخْرٰى ﴿۲۱﴾
اَلَكُمُ الذَّكَرُ وَلَهُ الْاُنْثٰى ﴿۲۲﴾ تِلْكَ اِذًا قِسْمَةٌ ضِيْزٰى ﴿۲۳﴾
اِنْ هِيَ اِلَّاۤ اَسْمَآءٌ سَمَّيْتُمُوْهَاۤ اَنْتُمْ وَاٰبَآؤُكُمْ مَّاۤ اَنْزَلَ
اِنْ يَّتَّبِعُوْنَ اِلَّا الظَّنَّ وَمَا تَهْوَى الْاَنْفُسُ ۚ
وَلَقَدْ جَآءَهُمْ مِّنْ رَّبِّهِمُ اللّٰهُ بِهَا مِنْ سُلْطٰنٍ ؕ الْهُدٰى ﴿۲۴﴾

(அந் நஜ்ம்: 20 - 24) பொருள்: இப்பொழுது நீங்கள் லாத்தைப் பற்றியும், உஸ்ஸாவைப் பற்றியும் எனக்குத் தெரிவியுங்கள். (அவைகளுடையதும் இதே நிலைமை தானா?)

மூன்றாவதாக மற்றொரு மனாத் (எனும் பெண் கடவுளைப்) பற்றியும் (எனக்குத் தெரிவியுங்கள்) என்ன? உங்களுக்கு ஆண் பிள்ளைகளும், அவனுக்குப் பெண் பிள்ளைகளுமா? உண்மையிலேயே இது முறையற்ற பங்கீடாகும். இவை நீங்களும், உங்கள் மூதாதையர்களும் வைத்துக் கொண்ட வெறும் பெயர்களேயாகும். இவற்றிற்காக அல்லாஹ் எந்தச் சான்றையும் இறக்கவில்லை. அவர்கள் யூகத்தையும், தங்கள் உள்ளங்கள் விரும்புவதையுமே பின்பற்றுகின்றனர். அவர்களிடம், அவர்களின் இறைவனிடமிருந்து நேர்வழி வந்து விட்டது. (அவ்வாறிருந்தும் அவர்கள் புரிய மாட்டார்கள்)

எவ்வாறாயினும், ஏற்கனவே கூறப்பட்டதைப் போன்று, மக்கா வெற்றிக்கு பிறகு உடனடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிலைகளை அகற்றும்படி வழிகாட்டல் வழங்கினார்கள். மக்களுடைய உள்ளங்களில் இருந்து அவற்றின் மீதான அச்சமும், கண்ணியமும் நீங்கி விட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். மேலும் மதிநுட்பம் மிக்க இந்த முடிவு மிகவும் அருளுக்குரியதாக நிரூபணமானது. ஏனெனில், அவற்றை அகற்றியதால் மக்களுடைய உள்ளங்களில் அவற்றின் மீதான பொய்யான அச்சமும் திகிலும் மறைந்தது. மேலும் அவர்களுக்கு முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் வைத்த ஏக இறைக் கொள்கையே சரியானது என்பதில் நம்பிக்கை வர ஆரம்பித்தது. அவற்றை எவ்வாறு வீழ்த்தினார்கள்? எவ்வாறு அந்த இடங்கள் அகற்றப்பட்டன? மேலும் பிறகு அதனால் என்ன எதிர்ப்பு கிளம்பியது? என்பது தொடர்பான சில சம்பவங்கள் இன்ஷா அல்லாஹ்! எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன். அவர்களில் ஒருவர் ஜாம்ஷீர் ஹைதராபாத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சவ்த்ரி குலாம் ஸாஹிப் அவர்களின் மகனான அப்துல் ஃகஃபூர் ஸாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் 92-ம் வயதில் மரணமடைந்துள்ளார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்கள் ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். பகோடா கோட்டில் இருந்து 1900-ம் ஆண்டின் ஆரம்பத்தில் கோட் அஹ்மதிய்யாவுக்கு இடம் மாறினார்கள். அன்னாரது தந்தையின் கிலாஃபத் மீதான நேசத்தின் காரணத்தினால் அவர்களுக்கு மேலான மார்க்கம் மற்றும் பௌதீகக் கல்விக்காக 1942-ல் காதியான் அனுப்பப்பட்டார்கள். அங்கு சவ்த்ரி ஸாஹிப் பாகிஸ்தானிற்கு ஹிஜ்ரத் செய்யும் வரை கல்வி பயின்றார்கள். அங்கு முன்னோர்கள் மற்றும் ஸஹாபிகளின் தூய தொடர்பால் அருள் பெற்றார்கள். இங்கு வந்த பிறகு எஞ்சிய கல்வியை சவ்த்ரி கஃபூர் ஸாஹிப் சென்யூட் மற்றும் ரப்வாவில் பெற்றார்கள். அதற்குப் பிறகு கராச்சியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பட்டம் பெற்றார்கள்.

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad